ISBN : 978-81-685845-3-2

செந்தமிழறிஞர்கள்:108



ம பெரியசாமி தூரன்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/93.%20%E0%AE%AE.%20%E0%AE%AA%E0%AF%86%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF%20%E0%AE%A4%E0%AF%82%E0%AE%B0%E0%AE%A9%E0%AF%8D_1908

செந்தமிழ்சிற்பிகள்

ம. பெரியசாமி தூரன் (1908 - 1987)



அறிமுகம்

ம.ப.பெரியசாமித்தூரன் செப்டம்பர் 26-ந்தேதி , 1908-ம் ஆண்டு பழனி வேலப்பக் கவுண்டர்-பாவாத்தாள் ஆகியோருக்கு மகனாக ஈரோடு மாவட்டம், மஞ்சக்காட்டு வலசு என்ற ஊரில் பிறந்தார். இளம் வயதிலேயே தாயை இழந்த தூரன் தனது பாட்டி வீட்டில் வளர்ந்தார்.

மொடக்குறிச்சியில் தொடக்கக்கல்வி முடித்து ஈரோடு மாகாசன உயர்நிலைப்பள்ளியில் பள்ளியிறுதி வகுப்பவரை படித்தார். 1926-27இல் சென்னை மாநிலக் கல்லூரியில், கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களை இடைநிலை (இன்டர்மீடியட்) வகுப்பில் பயின்றார். 1929 இல் இளங்கலை (பி. ஏ) கணித பட்ட வகுப்பில் சேர்ந்தார்.

கொங்கு வேளாளரில் "தூரன்" குலத்தைச் சார்ந்தவர் என்பதால் தன் பெயரோடு "தூரன்" என்று சேர்த்துக் கொண்டார். பெ. தூரன் ஒரு நாட்டுப்பற்றாளராகவும் தமிழ்ப் புலவராகவும் கர்நாடக இசை வல்லுநராகவும் அறியப்படுகிறார்.

தமிழ்ப்பணி

- மாணவப் பருவத்தில் ஈரோடு கருங்கல்பாளையம் நூலகம் சென்று ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார் முதலியோர் எழுதிய புதினங்களைப் படிப்பதை வழக்கமாகக் கொண்டார்.
- பெரியநாயக்கன்பாளையத்தில் இராமகிருஷ்ணா வித்யாலயத்தில் சேர்ந்து ஆசிரியராகவும், தலைமையாசிரியராகவும் 1948 வரை பணியாற்றினார்.
- 1929 முதல் நான்காண்டுகள் கோபிசெட்டிபாளையம் வைரவிழா உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றினார்.
- கலைக்களஞ்சியம் (1948-68) மற்றும் குழந்தைகள் கலைக்களஞ்சியம் (1968-76) இவற்றின் பொறுப்பாசிரியராகவும் , தமிழ் வளர்ச்சிக் கழகம் மற்றும் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகவும், தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும், பண்ணாராய்ச்சிக் குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் பதவி வகித்தவர்.

படைப்புகள்

- சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. மாணவராக இருந்த போது நெ.து.சுந்தரவடிவேலு உள்ளிட்ட தோழர்களுடன் இணைந்து 'வன மலர் சங்கம்' என்ற அமைப்பை நிறுவி அதன் மூலம் 'பித்தன்' என்ற இதழை நடத்தி வந்தார்.
- தமிழில் முதல் கலைக்களஞ்சியம் தொகுத்தளித்தவர். 1968 வரை 750க்கு மேற்பட்ட பக்கங்களையுடைய பத்து தொகுதிகளை வெளியிட்டார்.
- 100 பக்கங்களையுடைய குழந்தைகள் கலைக்களஞ்சியம் பத்து தொகுதிகளையும் 1976 வரை வெளியிட்டார்.
- குழந்தைகளுக்கு கதையாக, பாடலாக, நெடுங்கதையாக, அறிவியல் முறையில் 14 நூல்களைத் தூரன் இயற்றியுள்ளார்.

- சுப்பிரமணிய பாரதியின் படைப்புகள் பற்றிப் பதினொரு நூல்கள் எழுதியுள்ளார். உளவியல் தத்துவம் தொடர்பாக ஒன்பது நூல்கள் எழுதியுள்ளார்.

விருதுகள்/சிறப்புகள்

- தமிழக அரசால் இவரின் சில நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தின் மிகப்பெரிய இசைவாணர்கள் பலரும் தூரனின் பாடல்களை மேடையில் பாடியுள்ளனர்.
- 'பாரதி தமிழ்' நூற்பணிக்காக தமிழ் எழுத்தாளர் சங்கம் தங்கப் பதக்கம் வழங்கியுள்ளது.
- ‘கருவில் வளரும் குழந்தை’ நூலுக்காக மத்திய அரசுப் பரிசு பெற்றுள்ளார்.
- சிறுவர் கதை நூலுக்குக் குழந்தை எழுத்தாளர் சங்க பரிசு பெற்றுள்ளார்.
- பாரதி தமிழ் பணியைப் பாராட்டி பாரதியார் சங்கம் கேடயம் வழங்கியுள்ளது.
- தமிழ்ப் பணிக்காக இந்திய அரசு 'பத்மபூஷன் விருது' வழங்கி சிறப்பித்துள்ளது.
- சென்னை இயல் இசை நாடக மன்றம் கலைமாமணி விருது வழங்கி சிறப்பித்துள்ளது.
- தமிழிசை சங்கம் ‘இசை பேரறிஞர்’ விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

(😊)(😊) ஒஒஒஒஒ (😊)(😊)

நூல்கள்

2008-ல் தமிழக அரசால் பெரியசாமித் தூரனின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இணையநூலகத்தில் அந்நூல்களை இலவசமாக வாசிக்கலாம்.

இசைப்பாடல்கள்

- தமிழிசைப் பாடல்கள் (15-ம் தொகுப்பு)
- தமிழிசைப் பாடல்கள் (7-ம் தொகுதி)
- இசைமணி மஞ்சரி
- இசைமணிமாலை இணையநூலகம்
- முருகன் அருள்மணி மாலை இணையநூலகம்
- கீர்த்தனை அமுதம் இணையநூலகம்
- நவமணி இசைமாலை

மரபுக் கவிதைகள்

- மின்னல் பூ
- இளந்தமிழா
- பட்டிப் பறவைகள்
- தூரன் கவிதைகள்
- நிலாப் பிஞ்சு
- காற்றில் வந்த கவிதை

வசனகவிதைகள்

- இருளும் ஒளியும்
- அறிவாய் நீ
- மேலே பற
- மானிடா எழுக
- யாரது?
- வாழ்க்கைப் பயணம்
- சந்திப்பு
- நமது வழி

சிறார் இலக்கியம்

- நல்ல நல்ல பாட்டு
- சங்ககிரிக் கோட்டையின் மர்மம்
- மழலை அமுதம்
- நிலாப்பாட்டி - இணையநூலகம்
- பறக்கும் மனிதன்
- ஆனையும் பூனையும்
- கடக்கிட்டி முடக்கிட்டி
- மஞ்சள் முட்டை
- சூரப்புலி
- கொல்லிமலைக் குள்ளன்
- ஓலைக்கிளி
- தரங்கம்பாடித் தங்கப் புதையல்
- நாட்டிய ராணி

- மாயக்கள்ளன்
- தம்பியின் திறமை

கட்டுரைகள்

- தூரன் எழுத்தோவியங்கள்
- காலச் சக்கரம் (இதழியல்)

சிறுகதை

- பிள்ளைவரம்
- மா விளக்கு
- உரிமைப் பெண்
- காளிங்கராயன் கொடை
- தங்கச் சங்கிலி

அறிவியல் நூல்கள்

- பாரம்பரியம் (1956)
- அறமனம் (1957)
- குமரப்பருவம் (1962)
- மனமும் அதன் விளக்கமும் (1960)
- குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும் (1953)
- பெற்றோர் கொடுத்த பெருங்கொடை (1958)

பாரதி ஆய்வுகள்

- பாரதியும் பாரத தேசமும்
- பாரதியார் நூல்கள் ஒரு திறனாய்வு இணையநூலகம்
- பாரதியும் பாப்பாவும்
- பாரதித் தமிழ்
- பாரதியும் கடவுளும் இணையநூலகம்
- பாரதியும் சமூகமும் இணையநூலகம்
- பாரதியாரின் நகைச்சுவையும் நையாண்டியும் இணையநூலகம்
- பாரதியும் தமிழகமும் இணையநூலகம்
- பாரதியும் உலகமும் இணையநூலகம்
- பாரதியும் பாட்டும்
- பாரதி வசனத்திரட்டு

மொழிபெயர்ப்பு

- இரவீந்திரர் குழந்தை இலக்கியம் (1903)
- பறவைகளைப் பார் (1970)

- கானகத்தின் குரல் (The Call of the wild) (1958)
- தாகூரின் ஐம்பெருங் கட்டுரைகள்
- கடல் கடந்த நட்பு (1963) - நயோமி மிச்சிஸன் எழுதிய 'ஜூடி அண்ட் லக்ஷ்மி' நாவலின் தமிழாக்கம்

நாடகம்

- அழகு மயக்கம் (1955)
- சூழ்ச்சி (1955)
- பொன்னாச்சியின் தியாகம் (1955)
- ஆதி அத்தி (1958)
- காதலும் கடமையும் (1957)
- மனக்குகை (1960)
- இளந்துறவி (1961)

பதிப்பித்த நூல்கள்

- காளமேகப் புலவரின் சித்திரமடல்
- வடிவேல் பிள்ளையின் மோகினி விலாச நாட்டிய நாடகம்
- அவிநாசிப் புலவரின் திங்களூர் நொண்டி நாடகம்
- சாமிநாதக் கவிஞரின் கொன்றைவேந்தன் வெண்பா

பெரியசாமி தூரன்

https://www.jeyamohan.in/725/



பெரியசாமி தூரன்

முப்பத்தைந்தாண்டுகளுக்கு முன்னர் நயினார் என்று ஒரு பாடகரின் கச்சேரியைக் கேட்க நேர்ந்தது. குழித்துறை மகாதேவர் கோயிலில். அன்றெல்லாம் எங்களுக்கு சினிமா ஒரு பொருட்டே அல்ல. காரணம் படம்பார்க்க தொடுவட்டிக்குத்தான் செல்லவேண்டும். பணம் கொடுக்க வேண்டும். வீட்டில் அனுமதி பெரும்பாலும் கிடைக்காது. பள்ளியிறுதி வரை நான் பார்த்த மொத்த படங்களே பத்துக்குள்தான். சேர்த்து வைத்து புகுமுக வகுப்பில் பார்த்துத் தள்ளினேன். எங்களுக்கு கலை,கேளிக்கை எல்லாமே கோயில்திருவிழாக்கள்தான். பதினைந்து கிலோமீட்டர் வட்டத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கோயில்களில் திருவிழாக்கள் உண்டு. திற்பரப்பு, திருவட்டாறு, குழித்துறை, பாறசாலை போன்ற பெரிய கோயில்களில் வருடத்தில் பத்துநாள் திருவிழா.

பெரும்பாலான பெரிய திருவிழாக்கள் மன்னர்காலத்திலேயே ஒழுங்குசெய்யப்பட்டவை. கதகளி, ஓட்டந்துள்ளல், திருவாதிரைக்களி போன்ற கேரளச் செவ்வியல் கலைகள் முக்கியமாக நடக்கும். கதகளியில் எனக்கு ஒரு பித்து உண்டு. சிறிய அம்மன், சாஸ்தா கோயில்களில் அவற்றை நடத்துபவர்களின் ருசியை நம்பலாம் கம்யூனிஸ்டுகள் அன்று பல கோயில்களைக் கையில் வைத்திருந்தார்கள். குறிப்பாக மஞ்சாலுமூடு கோயிலில் நடக்கும் மலையாள சமூக நாடகங்கள் மிகவும் பிரபலம். பாட்டு கச்சேரிகள் சில இடங்களில் இருக்கும். எங்கள் குழு மாதம் இரு திருவிழாவுக்குச் சென்றுவிடுவோம். அக்காலகட்டத்தின் களியாட்ட மனநிலையை பின்னர் நான் அறிந்ததே இல்லை. இளமையும் கலைகளும் கலந்து உருவான போதை அது

அப்போதுதான் நயினாரின் பாடலைக் கேட்டேன். தொழில்முறைப் பாடகர் அல்ல.வறுகலை ராதாகிருஷ்ணனின் கதாபிரஸங்கம் தொடங்குவதற்கு முன்பு ஒரு மணிநேரம் ‘சும்மா’ ஒரு பாட்டு, பக்கமேளம் உள்ளூரிலேயே. அவரது கணீரென்ற குரல் முதலியேயே என்னைக் கவர்ந்தது. சுத்தமான தமிழ்ப்பாடல்களை மட்டுமே பாடினார். ஒரு பாடலைக் கேட்டு என்னவென்றே தெரியாத மன எழுச்சிக்கு ஆளாகி நான் கண்ணீர் சிந்தினேன். ‘என்னடா? என்னடா?’ என்று நண்பர்கள்

உலுக்கினார்கள். சொல்லத்தெரியவில்லை. மனம் பாகாக மாறி ஓடி மறைந்துவிட்டது. "முருகா முருகா என்றால் உருகாதோ உந்தன் உள்ளம்!"

இன்றும் அவ்வனுபவத்தை என்னால் மீட்டெடுக்க முடிகிறது. நான் அன்றுகூட பக்தன் இல்லை. கடவுள் நம்பிக்கை எங்கொ இருந்தாலும் அது பகவதிமீது தானே ஒழிய முருகனோ சிவனோ விஷ்ணுவோ அல்ல. நவீன இலக்கிய வாசிப்பு அதி தீவிரமாக நடந்துகொண்டிருந்தது. கம்யூனிஸ்டுக் கட்சி தொடர்பும், ஈடுபாடும் இருந்தது. அப்படியும் ஒன்று என்னை மீறி நிகழ்ந்துவிட்டது. மனிதவாழ்க்கையின் மீட்பற்ற பிரம்மாண்டமான தனிமையையும் அதன் கையறுநிலயையும் நான் சட்டென்று உணர்ந்தேன் என்று சொல்லலாம். அந்த நிகழ்ச்சியை வைத்து என்னை நெடுங்காலம் நண்பர்கள் கிண்டல்செய்வார்கள்.


மேலும் நாலைந்து வருடம்கழித்து பழைய குமுதம் இதழில் ஒரு செய்தியை வாசித்தேன். கோவையில் ஓர் அரங்கில் மதுரை சோமு அந்தப்பாடலை பாடினார். "முருகா முருகா என்றால் உருகாதோ உந்தன் உள்ளம்" சோமு எப்படிப் பாடியிருப்பார் என்பதை இசைரசனை உள்ளவர்கள் ஊகிக்க முடியும். அதைக் கேட்டுக்கொண்டிருந்த குள்ளமான, கண்ணாடி போட்ட, ஒரு மனிதர் கண்ணீர் விட்டு அழுதுகொண்டிருந்தாராம். அந்த மனிதர் பெயர் பெரியசாமி தூரன். அவர்தான் அந்தப்பாடலின் ஆசிரியர்.

பெரியசாமி தூரன் சிறுபிள்ளைகளுக்கெல்லாம் தெரிந்த பெயர். ஆரம்பப்பள்ளிமுதல் சிறுவர்கள் அவர் எழுதிய பாடல்களைப் பாடித்தான் வளர்ந்திருப்பார்க்ள். பெ.தூரன் என்றபெயரை நானெல்லாம் பேத்தூரன் என்று நெடுநாள் சொல்லிக்கொண்டிருந்தேன். சமீபத்தில் நண்பரின் குழந்தையும் அவ்வாறே சொல்வதைக் கேட்டேன். குழந்தைகள் வாயில் பெயர் ஒலிப்பதென்பது பெரிய அதிருஷ்டம். தூரனுக்கு அந்த யோகம் இருந்தது.

ஆனால் கணிசமான தமிழர்கள் ஆரம்பப்பள்ளிக்கு பிறகு தூரனைப்பற்றி எதையுமே கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். தூரனுக்கு மூன்று முகங்கள் உண்டு. குழந்தையிலக்கிய

ஆசிரியர், தமிழிசைப்பாடலாசிரியர். இவ்விருதளங்களிலும் இன்றும் அவரது பெயர் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. மகாராஜபுரம் சந்தானத்தின் இசை நிகழ்ச்சிகளில் பெரும்பாலும் சுத்தானந்த பாரதியார், பெரியசாமி தூரன் இருவரில் ஒருவர் இயற்றிய கீர்த்தனைகளில் ஒன்று வந்துவிடும். சஞ்சய் சுப்ரமணியம், அருணா சாய்ராம் போன்றவர்களின் கச்சேரிகளிலும் தூரனின் கீர்த்தனைகள் ஒலிக்கும்.

ஆனால் தூரனின் வாழ்க்கையின் பெரும்பகுதி வேறுவகையான பிரம்மாண்டமான அறிவுச்செயல்பாடுகளுக்காகவே செலவிடப்பட்டது. தமிழகம் கண்ட மாபெரும் அறிஞர்களில் ஒருவர் அவர்.



கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை



எஸ்.வையாபுரிப்பிள்ளை

நவீனத்தமிழின் அடிப்படைக் கட்டுமானங்களை உருவக்கியவர்கள் கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை எஸ்.வையாபுரிப்பிள்ளை, பெ.தூரன், என்ற மூவரைச் சொல்லலாம். தேசிகவினாயகம்பிள்ளையின் கல்வெட்டு

ஆராய்ச்சி முறைமை, வையாபுரிப்பிள்ளையின் தமிழ்ப்பேரகராதி, பெ.தூரனின் கலைக்களஞ்சியம் ஆகியவை முன்னோடிப் பணிகள். வழிகாட்டிக கொடிகள்.

அறுபதாண்டுகால சுதந்திர இந்திய வரலாற்றில் மிக அதிகமாக தமிழுக்குப் பங்களிப்பாற்றிய ஆட்சி தொடக்க இருபதாண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியே என்பதே உண்மை. தமிழை ஒரு நவீன மொழியாக உருவாக்கவும், அன்றாடப்பயன்பாட்டுக்குக் கொண்டுவரவும் தொலைநோக்குள்ள திட்டங்கள் உருவாக்கப்பட்டன. பேரறிஞர்கள் அவற்றில் பொறுப்பில் அமர்த்தப்பட்டு போதிய நிதியும் ஒதுக்கப்பட்டது. தமிழகம் முழுக்க நூலக இயக்கம் பரவலாகக் கொண்டுசெல்லப்பட்டது. இந்தச்செயல்பாடுகளில் அன்றைய கல்வியமைச்சர் தி.சு.அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களின் தலைமையும் வழிகாட்டலும் மிக முக்கியமானவை.



தி.சு.அவினாசிலிங்கம் செட்டியார்

விளைவாக தமிழர்கள் பெருமிதம் கொள்ளும் முயற்சிகள் தமிழில் நிகழ்ந்தன. இன்றும் நாம் புழங்கும் பலநூறு ஆட்சிச்சொற்கள் அப்போது ஆட்சிச்சொல்லாக்க குழுவினரால் உருவாக்கப்பட்டவை. இந்திய மொழிகளில் முன்னோடி முயற்சியாக ஒரு முழுமையான பேரகராதி உருவாக்கப்பட்டது. எஸ்.வையாபுரிப்பிள்ளையின் அந்தப் பேரகராதிக்கு இன்றுவரை உரிய முறையில் மறுபதிப்பு கொண்டுவரக்கூட பிறகுவந்த ஆட்சிகளால், மொழிக்கென அவர்கள் செலவழித்த கோடானுகோடிகளால் முடியவில்லை. இதை தீவிர திராவிட இயக்க ஆதரவாளரான தமிழாய்வாளர்

ஆ.இரா.வெங்கடாடலபதியே குறிப்பிட்டிருக்கிறார். பிறகு அகராதி முயற்சிகள் பல நடந்தன. அவையெல்லாம் திறனற்ற நகல் முயற்சிகளாக நீண்டு முடிவடையாமலேயே நின்றுவிட்டன.

அதேபோல முக்கியமானது தூரனின் பெரும் கலைக்களஞ்சியம். ஒரு மொழியின் முதல் பேரகராதியும் முதல் கலைக்களஞ்சியமும் எத்தகைய மகத்தான சாதனைகள் என்பதை இன்று பலரும் எண்ணிப்பார்ப்பதேயில்லை. கலைக்களஞ்சியத்துறையின் தலைவராக இருந்த போதிலும் கிட்டத்தட்ட தனியாளாகவே அவர் அப்பெரும்பணியை செய்து முடிக்கவேண்டியிருந்தது என்பதை தமிழ்ச்சூழலை வைத்துப் பார்ப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

தூரன் தன் கலைக்களஞ்சியத்தை உருவாக்கிய நாட்களில் அவரது உழைப்பைப்பற்றி சமகால அறிஞர்களான கி.வ.ஜகன்னாதன் போன்றவர்கள் பெரிதும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 20 வருடங்கள் ஒவ்வொருநாளும் விழித்திருக்கும் நேரம் முழுக்க அவர் அதில் ஈடுபட்டிருந்தார். நகலெடுக்கும் வசதிகளும் பிற வசதிகளும் இல்லாமலிருந்த அக்காலகட்டத்தில் அனைத்து தகவல்களையும் கையாலேயே குறித்துக்கொண்டு எழுதி அகர வரிசை அட்டைபோட்டு வேலைசெய்துகொண்டே இருந்திருக்கிறார். ஒரு சாதாரண உரையாடலின் போது சில நிமிடங்கள் பேசிவிட்டு ஓரமாக நகர்ந்து தன் வேலையில் மூழ்கிய தூரனைப்பற்றி கி.வ.ஜ சொல்கிறார்.

கலைக்களஞ்சியத்துக்குப் பின்னர் குழந்தைகள் கலைக்களஞ்சியம் ஒன்றையும் தூரன் உருவாக்கினார். இக்கலைக்களஞ்சியங்களின் அருமையை அறிய வேண்டுமென்றால் கால் நூற்றாண்டு கழித்து பெரும் நிதியுதவியுடன் பலநூறு பேர் எழுத தஞ்சை தமிழ் பலகலைக்கழகம் உருவாக்கிய வாழ்வியல் களஞ்சியம் என்ற கலைக்களஞ்சியத்துடன் ஒப்பிட வேண்டும். பெரும்பாலும் தூரனின் கலைக்களஞ்சியத்தை நீர்த்துப்போன மொழியில் நகலெடுத்திருக்கிறார்கள் ஆசிரியர்கள். அவற்றின் பெரும்பாலான கட்டுரைகள் கலைக்களஞ்சியம் என்ற தகுதிக்குள் வராதவை.

தூரனின் கலைக்களஞ்சியத் தொகுதிகளின் பயன் என்ன? எளிமையாக ஒன்றை கவனித்துப் பார்க்கலாம். அவரது

கலைக்களஞ்சியங்கள் வரத்தொடங்கியபின்னரே தமிழில் பொது அறிவு துறைசார்ந்த பல்லாயிரம் நூல்கள் எழுதப்பட்டன. மருத்துவம் இயற்பியல் போன்ற துறைகளில் கூட அடித்தள மாணவர்களுக்கு உதவக்கூடிய எளிய நூல்கள் முதல் பலவகையான நூல்கள் வெளிவந்தன. அவற்றை பெரும்பாலும் தமிழாசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். அவையெல்லாமே தூரனின் கலைக்களஞ்சியத்தின் மறு பிறப்புகள். தூரனின் கலைக்களஞ்சியம் நூறாக ஆயிரமாக பிளந்து பரவி தமிழ் அறிவுலகை உருவாக்கியது என்றால் மிகையல்ல.

அத்துடன் அனைத்து தளங்களுக்கும் தமிழைக் கொண்டு போக தூரன் செய்த ஆரம்பகால கடும் முயற்சி கலைச்சொற்களை தேவையாக்கியது. பலவகையான சொற்றொடர் முறைகளை தேவையாக்கியது. அந்தச் சவாலை அவர் சந்தித்ததாலேயே அவரது கலைக்களஞ்சியம் நவீனத்தமிழுக்கு அடித்தளமாக அமைந்தது.

நான் என் உயர்நிலைப்பள்ளி வாழ்க்கையில் தூரனின் கலைக்களஞ்சியத்தொகுதியின் தீவிர வாசகனாக இருந்தேன். அக்காலத்தில் தொடர்ச்சியாக நடக்கும் கட்டுரை பேச்சுப்போட்டிகளுக்காக நாங்கள் நண்பர்கள் முண்டியடித்து, அக்கலைக்களஞ்சியங்களை நூலகமாக இருந்த ஆசிரியர் ஓய்வறையில் தரையில் அமர்ந்து படித்து குறிப்பெடுப்போம். வேறு கலைக்களஞ்சியங்கள் எதையுமே கண்டிராத அந்த வயதில் அந்தக் கிராமத்துப் பள்ளியில் அந்நூல்கள் மானுட அறிவின் பிரம்மாண்டத்தை உணர்த்துவனவாக இருந்தன.

ஈரோடு மாவட்டம் மஞ்சக்காட்டு வலசை என்ற கிராமத்தில் 1908ல் செப்டெம்பர் 26 ஆம் நாள் பிறந்தார் தூரன். தூரன் என்பது கொங்கு கவுண்டர்களில் ஒரு துணைப்பிரிவு. தந்தை பழனியப்பக் கவுண்டர். தாய் பாவாத்தாள். மொடக்குறிச்சியில் ஆரம்பப்பள்ளிக்கல்வி பெற்றபின் ஈரோடு மாசன உயர்நிலைப்பள்ளியில் பள்ளியிறுதி முடித்தார். அப்போது ஆசிரியராக இருந்த திருமலைச்சாமி அய்யங்காரால் அவருக்கு தமிழார்வம் உருவானது.

1939ல் காளியம்மாளை மணம்புரிந்துகொண்டார். மூன்று பெண்களும் ஒரு ஆணுமாக நான்கு குழந்தைகள்.தூரன் 1927 சென்னை மாநிலக்கல்லூரியில் அறிவியல்பாடங்களில் இண்டர்மிடியட் படித்து வென்றார். 1929ல் கணிதத்தில்

எல்.டி பட்டம்பெற்று ஆசிரியர் பயிற்சியும் பெற்றார். 1929 முதல் நான்காண்டுகள் கோபிசெட்டிபபளையம் வைரவிழா உயர்நிலைப்பள்ளியிலும் பின்னர் போத்தனூர் மற்றும் பெரியநாயக்கன் பாளையம் பகுதிகளில் இயங்கிய ராமகிருஷ்ணா உயர்நிலைப்பள்ளியிலும் ஆசிரியராக பணியாற்றினார். இக்காலகட்டத்தில் அவர் முறைப்படி மரபிசையைக் கற்றுத்தேர்ந்தார்.

சிறு வயதிலேயே உறுதியான காங்கிரஸ்காரர். சுதந்திரத்துக்குப்பின் தி.சு.அவினாசிலிங்கம் அழைப்பை ஏற்று 1948 முதல் 1968 வரை இருபதாண்டுக்காலம் தன்னாட்சி உரிமையுடன் இயங்கிய தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் பொறுப்பில் இருந்து கலைக்களஞ்சிய வெளியீட்டில் ஈடுபட்டார். சராசரி 750 பக்கங்கள் கொண்ட 10 தொகுதிகளாக இந்நூல் வெளிவந்தது. அத்தகைய ஒரு கலைக்களஞ்சியம் இந்திய மொழிகளில் தமிழிலேயே முதலில் வெளிவந்தது. பின்னர் தன் சொந்த முயற்சியால் 1976 வரை உழைத்து சராசரி 100 பக்கங்கள் கொண்ட 10 தொகுதிகளாக குழந்தைகள் கலைக்களஞ்சியத்தை வெளியிட்டார்.

தூரனின் சாதனைகளில் முக்கியமானது பாரதியார் 1904 முதல் 1921 வரை சுதேசமித்திரன் இதழில் எழுதிய படைப்புகளைத் தேடி எடுத்து ஆவணப்படுத்தி காலவரிசைப்படி தொகுத்து 'பாரதி தமிழ்' என்ற பேரில் வெளியிட்டது. பாரதி ஆய்வுகள் தமிழில் தொடங்கப்படுவதற்கான வழிகாட்டி முயற்சி என்பதுடன் பாரதி படைப்புகள் அழிந்துவிடாமலிருக்க தக்க நேரத்தில் செய்யப்பட்ட பெரும்சேவையுமாகும். திரு.வி.கவின் ஆலோசனைப்படி இதை தூரன் செய்ததாகச் சொல்லப்படுகிறது.

தூரன் கவிதைகள், கதைகள், இதழியல்கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள் என கிட்டத்தட்ட 20 நூல்களை படைத்திருக்கிறார். தூரனின் கவிதைகள் பாரதி கவிதைகளின் பாதிப்பில் எழுந்த நேரடியான மொழி எழுச்சி கொண்டவை. ஆனால் பாரதியிடம் இருந்த நவீன படைப்புத்திறன் அவரிடம் இல்லை. இலக்கியப் படைப்பாளியாக தூரனின் பங்களிப்பு முக்கியமானதல்ல.

தூரன் 1980 முதல் நோய்வாய்ப்பட்டிருந்தார். 1987 ல் ஜனவரி 20 ஆம் நாள் மரணமடைந்தார். கடைசிக்காலத்தில் கிட்டத்தட்ட முழுமையான புறக்கணிப்புக்கு உள்ளாகியிருந்தார். பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களின் உதவி மட்டுமே இருந்தது. சிற்றிதழ் சார்ந்த சூழலில் மட்டுமே அவரது பெரும் சாதனைகளைப்பற்றிய மெல்லிய பிரக்ஞை எஞ்சியிருந்தது. `நான் செத்தால் ரேடியோவிலே கூட சொல்லமாட்டாங்களே ராமசாமி" என்று அவர் வாதநோய் கண்டு படுக்கையில் இருக்கையில் பார்க்கவந்த சுந்தர ராமசாமியிடம் கண்ணீர் மல்கச் சொன்னார்.

தூரனைப்பற்றிய தொகை நூல் ஒன்றை பாரதீய வித்யா பவன், கோவை மையம் வெளியிட்டிருக்கிறது. சிற்பி பாலசுப்ரமணியம் தொகுப்பாசிரியராகவும் பேராசிரியர் இராம இருசுப்பிள்ளை, டாக்டர் ஐ.கெ.சுப்ரமணியம் ஆகியோர் இணையாசிரியர்களாகவும் செயல்பட பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களின் முன்னுரையுடன் வந்திருக்கிறது இந்த நூல்.

தூரனின் நூற்றாண்டு முடிந்த பின்னர் இதை எழுத வேண்டுமென எண்ணியிருந்தேன். தான்சார்ந்த மொழிக்கும் பண்பாட்டுக்கும் தன் இறுதிச்சொட்டு உழைப்பை அளித்து மறைந்த அந்த எளியமனிதரைப்பற்றி சம்பிரதாயமாக ஏதும் சொல்லிவிடக்கூடாது என்ற எண்ணம் இருந்தது. எளிமை, தனக்குள் மூழ்கி உழைக்கும் அர்ப்பணிப்பு ஆகியவை அடிப்படை விழுமியங்களாக இருந்த ஒரு காலகட்டத்தின் பிரதிநிதி பெரியசாமி தூரன்.

rpy gaDs;s ,izajsq;fs;

01] **ghujpapd; eifr;RitAk; ieahz;bAk;**
https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZl9kuty.TVA_BOK_0003744

02] **ghujpapd; E}y;fs; Xu; jpwdha;T**
https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZl9kuty.TVA_BOK_0003694

03] **இனிக்கும் தமிழும் இசையின் குறிப்பும் 26 பெரியசாமி தூரன் 1908-1987**
https://mana-vasanai.blogspot.com/2015/01/1908-1987.html

04] **தூரன் எழுத்தோவியங்கள் -பெரியசாமி தூரன்**
https://archive.org/details/orr-3020

05] பாரதி தமிழ் வசனத் திரட்டு
https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZl1kZty.TVA_BOK_0003794

இனிக்கும் தமிழும் இசையின் குறிப்பும்
பெரியசாமி தூரன் 1908-1987

https://mana-vasanai.blogspot.com/2015/01/1908-1987.html



தமிழ் நாட்டில் ஈரோடு அருகில் மஞ்சக் காட்டு வலசு என்ற கிராமத்தில் பிறந்து, தமிழார்வமும், இசையார்வமும், தேசப்பற்றும் மிகுந்து வாழ்ந்தவர் பெரியசாமி தூரன். நம்மில் பலர் தாயே திரிபுரசுந்தரி என்ற சுத்த சாவேரி பாடல் முதல், மாண்ட் இராகத்தில் முரளிதரா கோபாலா, பிருந்தாவன சாரங்காவில் 'கலியுக வரதன் வரை பல பாடல்களை விரும்பிக் கேட்டிருக்கிறோம். இவர் பெயர் தெரியாதவருக்கும் இவரது பாடல் தெரியும். இவர் தான் எழுதினார் என்பதை அறியாமலே இவர் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறோம்.

இவர் மகாகவி பாரதியின் பாடல்களைப் பற்றி பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளார். தமிழ் கலைக் களைஞ்சியத்திற்கும் குழந்தைகள் கலைக் களைஞ்சியத்திற்கும் ஆசிரயராய் இருந்தார். அதாவது தமிழ் encyclopedia விற்கு ஆசிரியர். பல நூல்களை எழுதியுள்ளார். ஆன்மீகம் மற்றும் இன்றி பல சமுதாயப்பாடல்களையும் எழுதி யுள்ளார். தேசிய விருதான பத்மபூஷன் விருதும், தமிழ் நாட்டு அரசின் விருதான கலைமாமணி விருதும் பெற்றவர். இவரது நூல்களை தமிழக அரசு நாட்டுடமையாக்கி சிறப்புப்படுத்தியுள்ளது. பாடல்கள் எழுத எழுத கர்நாடக இசைப் பயிற்சியும் பெற்றார். பல இசை வித்வான்களுடன் சேர்ந்து தனது பாடல்களுக்கு இசை அமைத்தார்.

பல தமிழ் நிகழ்ச்சிகளில் தமிழில் விநாயகர் பாடலைத் தேடும் போது இவரது 'கணநாதனே குணபோதனே' கைக்கொடுக்கும் .

இவரது சில பாடல்களின் தொகுப்பு வலை தளத்தில் இலவச நூலாக வெளியடப்பட்டுள்ளது. அந்தத் தளம் இங்கு காணலாம். https://archive.org/details/orr-3174

இவரது கர்நாடக இசை பாடல்களின் பட்டியலையும், அத்துடன் பாடல் பதிவுகளையும் சிலவற்றையும் இந்த வலை தளத்தில் காணலாம். https://sites.google.com/site/periasamythooran/Home/Keerthanas-mp3

திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பார்கள். முழுப்பாடலே வேண்டாம், அந்த ஈசனின் மகன் 'முருகனை' பெயர் சொல்லி அழைத்தாலே போதும். உள்ளம் உருகிவிடும் என்கிறார் பெரியசாமி தூரன்.

பல்லவி

முருகா முருகா என்றால் உருகாதோ உந்தன் உள்ளம்
வருவாய் வருவாய் என்றால் பரிவோடு வாராயோ
(முருகா)

அனு பல்லவி

ஒருக்கால் உரை செய்தாலும் உன் பாதம் நினைந்தாலும்
அருளே தந்திடும் கந்தா அல்லும் பகலும்
(முருகா)

சரணம்

அறியாது நான் செய்த பிழையால் நீ வெறுத்தாயோ
அன்பே வடிவம் கொண்ட ஐயா நீ சினந்தாயோ
சிறியேன் என் குறை எல்லாம் பொறுத்தே அருள்செய்வாய்
செந்தில் மாநகர் வாழும் தேவாதி தேவனே
(முருகா)

இந்தப் பாடலை M.S. சுப்புலக்ஷ்மி குரலில் கேட்போம்...

https://www.youtube.com/watch?v=jCMTaUiZWSI

அவனை அழைத்தால் நம் உள்ளம் உருகும். உருகிய உள்ளம் இன்னும் கொஞ்சம் குகனைக் கொஞ்சி கொஞ்சி அழைக்கும். பாலன் தான் அவன் ஆனால் அவனே நம் யாவரையும் பேணிக் காப்பான். எதுகையும் மோனையும் துள்ளி விளையாட இந்தப் பாடலைக்

கேட்டால் முருகனின் கால் சதங்கை ஒலி நம் நெஞ்சத்தில் மிஞ்சி நிற்கும்....

கொஞ்சி கொஞ்சி வா குஹனே
முருகனே கொஞ்சி கொஞ்சி வா (கொஞ்சி.. கொஞ்சி..)

அனுபல்லவி

அஞ்சல் அஞ்சல் எனவே செஞ்சொல் சதங்கை கொஞ்ச
கஞ்ச பதம் பெயர்ந்து என் நெஞ்சம் மகிழ்ந்திடவே
(கொஞ்சி... கொஞ்சி..)

சரணம்

பிஞ்சு மதி அணிந்த செஞ்சடை ஈசனும்
அஞ்சன மணிநீல மஞ்சன உமையாளும்
கொஞ்சி மகிழ் குமரா முருகா
அஞ்சுடர் வடிவேலா
தஞ்சம் உன்னை அடைந்தேன்
மிஞ்சிய அன்போடு....(கொஞ்சி கொஞ்சி)

இந்தப் பாடலை இனிய குரலில் பாம்பே ஜெயஸ்ரீ பாடுவதைக் கேட்போம் ..

https://www.youtube.com/watch?v=bqU9k5YqDnM

காஞ்சிப் பெரியவர் பற்றி 'புண்ணியம் ஒரு கோடி நான் புரிந்தேனோ என்ற இவர் பாடல் மிகவும் உருக்கமாக இருக்கும். இதை சிக்கில் குருசரண் குரலில் இந்தப் பதிவில் காணலாம். https://www.youtube.com/watch?v=I5t9bmqcaxE

தினம் ஒரு பாடல் எழுதுவது என்ற வழக்கத்தை பல ஆண்டுகளுக்கு கொண்டிருந்தாராம். தூரலாய் இல்லாமல் இந்தத் தூரனின் வாய் மொழி பெருமழையைப் பொழிந்ததில் தமிழ் இசைப்பயிர் மேலும் மேலும் வளர்ந்தது.

காற்றில் கீதங்கள் : தூரனின் தமிழ்த் தூறல்!
https://www.hindutamil.in/news/supplements/anantha-jothi/510497-kaatril-geethangal.html

வா.ரவிக்குமார்

தமிழையும் அறிவியலையும் இணைக்கும் புள்ளியாக இலக்கியத்தில் தன்னுடைய பங்களிப்பைச் செலுத்தியவர் பெரியசாமி தூரன். அறிவியல் கலைக் களஞ்சியம், குழந்தைகள் கலைக் களஞ்சியம் ஆகியவற்றைத் தமிழில் உண்டாக்கிய பெருமைக்கு உரியவர். பாரதியாரின் படைப்புகளைக் குறித்த ஆய்வு நூல்களையும் எழுதியிருக்கும் பெரியசாமி தூரன், இசை உலகத்துக்கும் பெரும் பங்களிப்பை செலுத்தியவர். முரளிதர கோபாலா, கலியுக வரதன், தாயே திரிபுரசுந்தரி போன்ற இவரின் புகழ்பெற்ற பாடல்களை கர்னாடக இசை உலகில் எம்.எஸ்.சுப்புலட்சுமி தொடங்கிப் பலரும் பாடிப் பிரபலப்படுத்தியிருக்கின்றனர்.

பெரியசாமி தூரனின் தமிழ், காலதேச வர்த்தமானங்களைக் கடந்து மேற்குலகில் வசிப்பவர்களையும் வசீகரிக்க வைப்பதற்கான சாட்சி, அவருடைய `நீ நினைந்தால் ஆகாததும் உண்டோ... நிரஜதல நயனி மகாலட்சுமி' பாடலுக்கு பிரபல கிளாரினெட் கலைஞர் ஷங்கர் துக்கர் இசையமைத்திருப்பது.

அந்தப் பாடல் அமைந்த தர்பாரி கானடா ராகத்திலேயே வித்யா வாக்ஸும் வந்தனா அய்யரும் பாடியிருக்கின்றனர். கிளாரினெட்டில் ராகத்தின் ஆதார ஸ்ருதிகளை குறிப்பால் உணர்த்திவிட்டு பாடும் குரலோடு உறுத்தாமல் தொடர்கிறது இசை. தாளத்துக்கு மெலிதாக டிரம்ஸ், தபேலா, இடையிடையே கஞ்சிராவையும் சேர்த்துக் கொள்கின்றனர்.

'சாதனைகளும் சோதனைகளும் வாழ்க்கையில் மாறி மாறி வந்தாலும் உன் அருள் இல்லாமல் வாழ்வதற்கு வழி ஏது?' என்று அன்னை மகாலஷ்மியிடம் கேள்வியாலேயே ஒரு அருள் கோரிக்கையை முன்வைக்கும் இந்தப் பாடலைப் பாடிய இரண்டு பெண்களின் குரலும், பெ.தூரனின் தமிழ்த் தூறலும் கேட்பவர்களின் காதுகளுக்கு இனிமை சேர்க்கின்றன.

https://www.keetru.com/index.php/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/29507-2015-11-02-04-51-43

‘செந்தமிழ்ச் செல்வர்’ ம.ப.பெ. துரன்!

பி.தயாளன்

பிரிவு: தமிழ்நாடு

வெளியிடப்பட்டது: 02 நவம்பர் 2015

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனிப்பெரும் சாதனை என்று மதிப்பிடப்படுகின்ற கலைக்களஞ்சியம், குழந்தைகள் கலைக்களஞ்சியம் இரண்டிற்கும் முதன்மை ஆசிரியராக இருந்தவர். வரலாற்று இலக்கிய சமூக நாடகங்களை படைத்து அளித்தவர். சிறுவர் இலக்கியம் படைத்து இளைய தமிழுக்கு வளமை சேர்த்தவர். மொழி பெயர்ப்பிலும் ஈடுபட்டு தமிழுக்குப் பெருமை சேர்த்தவர். தேசபக்தராகவும் இதழாளராகவும் இலக்கியப் படைப்பாளியாகவும் திகழ்ந்தவர். தமிழிசை வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். மகாகவி பாரதியை பல்வேறு கோணங்களில் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர். அவர்தான் ‘செந்தமிழ்ச் செல்வர்’ எனப் போற்றப்படும் ம.ப.பெ.துரன்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சிக்கு அருகில் உள்ள மஞ்சக்காட்டுவலசு என்னும் சிற்றூரில் 1908 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 26 ஆம் நாள், பழனிவேலப்பர்-பாவாத்தாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார் தூரன். பெற்றோர் சூட்டிய பெயர் பெரியசாமி என்பதாகும். கல்லூரியில் படிக்கும்பொழுது 'தூரன்' என்ற புனைப்பெயரை வைத்துக் கொண்டார்.

தொடக்கக் கல்வியை மொடக்குறிச்சி தொடக்கப் பள்ளியிலும், ஆறாம் வகுப்பு முதல் பள்ளியிறுதி வகுப்புவரை ஈரோடு மகாசன சபா உயர்நிலைப் பள்ளியிலும் பயின்று முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரத்தியாகிகளான பகத்சிங், சுகதேவ், இராஜகுரு ஆகியோர் 1931 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் தூக்கிலிடப்பட்டனர். இந்த நிகழ்ச்சியால் மனம் வெதும்பிய தூரன் இளங்கலை இறுதி ஆண்டுத் தேர்வை எழுதாமல் புறக்கணித்தார்.

நண்பர்களுடன் இணைந்து 'வனமலர்ச் சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அந்த அமைப்பின் மூலம் 'பித்தன்' என்ற இதழை நடத்தினார்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் வேண்டுகோளை ஏற்று தூரன், சுதேசமித்திரன் அலுவலகம் சென்று சுதேசமித்திரன் இதழில் வெளிவந்த மகாகவி பாரதியாரின் எழுத்துக்களைத் தொகுத்து அளித்தார்.

தி.க. அவினாசிலிங்கம், போத்தனூரில் தொடங்கிய இராமகிருஷ்ணா வித்யாலயத்தில் ஆசிரியராகப் பணி புரிந்தார். பள்ளியில் பணிபுரியும்போது தான் பெற்று வந்த ஊதியம் அதிகம் எனக் கருதி குறைந்த ஊதியமே பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பணிபுரிந்த பள்ளிக்கு அப்போது வருகை புரிந்த மகாத்மாக காந்தியடிகளை வரவேற்றுச் சிறப்பித்தார்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி அமைச்சரவையில், கல்வி அமைச்சராக இருந்த தி.க. அவினாசிலிங்கம், தமிழ் மொழி வளர்ச்சிக்காக, தன்னாட்சி உரிமையுடைய 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அந்த அமைப்பின் சார்பில் தமிழில் 'கலைக்களஞ்சியம்' பல தொகுதிகளாக வெளியிடத் திட்டம் வகுக்கப்பட்டது. கலைக்களஞ்சியம் தயாரிக்கும் பணிக்கு தூரன் முதன்மை ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பத்தொண்பது ஆண்டுகள் உழைத்து கலைக்களஞ்சியத்தை உருவாக்கினார். மேலும், குழந்தைகள் கலைக் களஞ்சியத்தை 1976 ஆம் ஆண்டு வெளியிட்டார். இது தூரனின் சாதனைப் பணி எனலாம்.

'இளந்தமிழா', 'மின்னல் பூ', 'நிலாப் பிஞ்சு', 'பட்டிப் பறவைகள்' முதலிய கவிதை நூல்களைப் படைத்து அளித்துள்ளார். அக்கவிதை நூல்களைத் தொகுத்து 'தூரன் கவிதைகள்' என்ற பெயரில் நூலாக வெளிவந்தது.

தூரன் தமது கவிதைகள் மூலம், பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும், சாதி பாகுபாட்டையும், சமூகத்தில் நிலவும் வறுமையையும் சாடுகிறார்.

'தியாகம்'. 'வீரன் குமரன்', 'கிழவியும் ராணாவும்', 'பிருதிவி ராஜ் - சம்யுக்தை' முதலிய சிறிய கதைக் கவிதைகளை எழுதியுள்ளார்.

'காதலிக்குக் கடிதம்' 'பதில்', 'கடிதம்'- முதலிய கடித வடிவில் கவிதை நூல்களை எழுதி தமிழுக்கு வளமை சேர்த்துள்ளார்.

உரையாடல் வடிவில் அமைந்த 'ஓடக்காரன்', இசைப் பாடல் வடிவில் அமைந்த 'உள்ளம் தளராதே' நாட்டுப்புறப்பாடல் வடிவில் அமைந்த 'கைவளம்' முதலிய புதுமைகளையும் தமிழுக்கு அளித்துள்ளார்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பே வசன கவிதைப் பரிசோதனையில் ஈடுபட்டு, 'இருளும் ஒளியும்', 'அறிவாய் நீ', 'மேலே பற', 'மானிடா எழுக' 'யாரது?' 'வாழ்க்கைப் பயணம்',

'சந்திப்பு', 'நமது வழி' முதலிய வசன கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். அந்த வசன கவிதை நூல்கள் புதுக்கவிதையின் பேச்சுச் சந்தமும், உரைநடை சிறப்பும் கொண்டவைகளாக அமைந்துள்ளது. 'பிள்ளைவரம்', 'உரிமைப் பெண்', 'தங்கச் சங்கிலி', 'காளிங்கராயன் கொடை', 'மாவிளக்கு' முதலிய சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டு உள்ளார். இவரது சிறுகதைகள் மதுவிலக்கையும், சமூக அறநெறிகளையும் உணர்த்துபவைகளாகும்.

'அழகு மயக்கம்', 'சூழ்ச்சி' 'பொன்னியின் தியாகம்', 'ஆதி-அந்தி', 'காதலும் கடமையும்', 'மனக்குகை', 'இளந்துறவி' முதலிய ஏழு நாடகங்களைப் படைத்தளித்துள்ளார். தூரனின் நாடகங்களில் நாட்டுப் பற்று, தூய காதல், உள்ளத்து முரண்பாடுகளின் மோதல், கலை விளைவிக்கும் தடுமாற்றம், மகளிரின் தியாகம், ஆழ்மனம் நிகழ்த்தும் விளையாட்டு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவைகளாகும்.

'பூவின் சிரிப்பு', 'காட்டுவழிதனிலே', 'தேன் சிட்டு' முதலிய கட்டுரைத் தொகுதிகளை தமிழுலகுக்கு அளித்துள்ளார்.

"கட்டுரை', 'இலக்கியம்' என்ற தகுதியைப் பெற வேண்டுமானால் எடுத்தாளும் பொருள்களைவிட, எழுதுகின்ற மனிதனின் சொந்த மனப்பான்மையையும், உணர்ச்சிகளையும் அது தாங்கி நிற்க வேண்டியது முக்கியம். மேலும், கட்டுரைகளில் இலக்கியச் சுவையும் கலைப் பண்பும் சிறப்பிடம் பெற வேண்டும்" எனக் கட்டுரைக்கு இலக்கணம் வகுத்துள்ளார் தூரன்.

குழந்தைகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சிறுகதைகளையும், நாவல்களையும், பாடல்களையும் படைத்து 'குழந்தை இலக்கிய'த்துக்கு பாடுபட்டவர் தூரன்.

'ஓலைக்கிளி', 'தம்பியின் திறமை', 'நாட்டியராணி', 'மஞ்சள் முட்டை', 'நிலாப்பாட்டி'முதலிய குழந்தைக் கதை நூல்களை எழுதியுள்ளார். 'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்', 'ஊமை ஒரு

குறையல்ல' என்ற சமூகக் கருத்துக்களை, தனது குழந்தைகளுக்கான கதைகளில் விதைத்துள்ளார்.

குழந்தைகளின் மனதில் நல்ல பண்புகளை பதிய வைத்து வளர்க்க வேண்டும், தீமையை எதிர்த்துப் போராடும் துணிவை ஏற்படுத்த வேண்டும், உண்மையைப் பேசுபவன் உயர்வு பெறுவான், உழைப்பின் உயர்வு, தாய்மொழிப் பற்று முதலிய கருத்துக்களை முதன்மைப்படுத்தியுள்ளார் தூரன்.

நாவல் என்ற புனைகதை வடிவில் சிறுவர்களுக்காகத் தூரன், 'மாயக்கள்ளன்', 'சூரப் புலி', 'கொல்லிமலைக் கள்ளன்', 'சங்ககிரிக் கோட்டை மர்மம்' 'தரங்கம்பாடித் தங்கப்புதையல்', முதலியவற்றை படைத்தளித்து உள்ளார்.

தூரனின் கதையுலகில், சிறுவர்களின் அறிவுக்கும், ஆற்றலுக்கும், துணிவுக்கும், செயல் திறனுக்கும் தூண்டுதல்களுக்கான கூறுகள் அமைந்துள்ளன.

குழந்தைகளின் கலை வளரும் உள்ளத்துக்கு', ஆனையும் பூனையும்', 'நல்ல நல்ல பாட்டு' 'மழலை அமுதம்' முதலிய குழந்தைப் பாடல் நூல்களை எழுதி அளித்துள்ளார். அப்பாடல்கள் மூலம் ஒற்றுமையின் தேவை. சாதி சமய ஏற்றத்தாழ்வுகள் கூடாது. கல்வியின் முக்கியத்துவம் முதலிய கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார்.

'மனமும் அதன் விளக்கமும்', 'கருவில் வளரும் குழந்தை', 'பாரம்பரியம்', 'அடிமனம்', 'பெற்றோர் கொடுத்த பெருங்கொடை', 'குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும்' முதலிய அறிவியல் நூல்களையும் எழுதியுள்ளார்.

"படித்து பட்டம் பெற்று ஆராய்ச்சி செய்த நமது நாட்டு விஞ்ஞானிகள் எவரும், தாங்கள் கண்டுபிடித்ததை தாய்மொழியில் நூல்களாக இயற்றாததால், ஆங்கிலம் படிக்காத பெரும்பான்மையான தமிழ் மக்களுக்கு யாதொரு பயனும்

இல்லை" எனக்கூறி, அறிவியல் ஆராய்ச்சி நூல்கள் பலவும் தமிழில் வெளிவர வேண்டும் எனப் பாடுபட்டார் தூரன்.

மகாகவி பாரதியாரின் கருத்துக்களை, சிந்தனைகளை 'பாரதி தமிழ்' என்ற வரிசையில் 134 தலைப்புகளில் பத்து தொகுதிகளாக வெளியிட்டு உள்ளார்.

'இரவீந்தர் குழந்தை இலக்கியம்', 'கானகத்தின் குரல் ', 'கடல் கடந்த நட்பு', 'பறவைகளைப் பார்' முதலிய நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து அளித்துள்ளார் தூரன்.

'தமிழிசைப் பாடல்கள்', 'இசை மணிமாலை', 'நவமணி இசைமாலை', 'கீர்த்தனை மஞ்சரி', 'இசைமணி மஞ்சரி', 'கீர்த்தனை அமுதம்' முதலிய இசை நூல்களை வெளியிட்டு தமிழிசையின் வளர்ச்சிக்குப் பாடுபட்டார் தூரன்.

தூரன், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் செயலாளராகவும், தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம், சாகித்திய அகாதெமி, இயல் இசை நாடக மன்றம், திரைப்படத் தணிக்கைக் குழு, அனைத்திந்திய எழுத்தாளர் மன்றம் முதலிய பல அமைப்புகளில் உறுப்பினராக இருந்து பாடுபட்டுள்ளார்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும், தமிழ் இசைக் கல்லூரியின் ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் சிறப்பாக பணியாற்றினார்.

'பத்ம பூஷன்', 'கலைமாமணி', 'இசைப் பேரறிஞர்', 'பெருந்தமிழ்ச் செல்வர்', 'செந்தமிழ் கலைச் செல்வர்', 'செந்தமிழ்ச் செல்வர்' முதலிய விருதுகளும், பட்டங்களும் தூரனுக்கு பெருமை சேர்த்தன.

தமிழ் இலக்கியத்திற்கும், தமிழிசைக்கும், குழந்தை இலக்கியத்திற்கும், அறிவியலுக்கும் தொண்டாற்றிய தூரன் 1987 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆம் நாள் தமது எழுபத்தெட்டாவது

வயதில் காலமானார். தூரன் மறைந்தாலும் அவரது தமிழ்ப் பணி என்றும் நிலைத்து நிற்கும்.

கலைக்களஞ்சியம் உருவாக்கிய பெ.தூரன்

கலைமாமணி விக்கிரமன்

https://s-pasupathy.blogspot.com/2017/01/2_20.html



ஜனவரி 20. ம.பெரியசாமி தூரனின் நினைவு தினம்.

திலகர் தூவிய விதை, பல தேச பக்தர்களை நாட்டில் உருவாக்கியது. மகாகவி பாரதியார் எழுப்பிய கனல், பல நூறு இளைஞர்களைக் கிளர்ந்தெழச் செய்தது. தொண்டர் பல்லாயிரம் கூடினர். இந்த இளைஞருள் சிலர் நூற்றாண்டு விழா கொண்டாடும் அளவுக்குச் சாதனை புரிந்தார்கள். அவர்களுள் ம.ப. பெரியசாமித்தூரனை தமிழுலகம் மறக்க முடியாது.


மகாகவி பாரதி மறைந்தபோது கல்லூரி மாணவராக விடுதலை வேட்கையுடன் இருந்த ம.ப. பெரியசாமித்தூரன் தமிழ் இலக்கியத்தில் பன்முகங்களில் தொண்டாற்ற வேண்டும் என்ற லட்சியத்தை வளர்த்துக் கொண்டார்.

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியைச் சேர்ந்த மஞ்சக்காட்டுவலசு

என்ற சிற்றூரில், பழனிவேலப்பக் கவுண்டர் - பாவாத்தாள் தம்பதிக்கு 1908-ஆம் ஆண்டு செப்டம்பர் 26-ஆம் தேதி பிறந்தார். தூரன் என்பது அவர் குலப்பெயர். அதுவே நிலைத்துவிட்டது.

தூரனின் எழுத்தார்வத்துக்கு அவருடைய பாட்டிதான் காரணம். சிறுவயதிலேயே தாயார் மறைந்ததால், தாய்வழிப் பாட்டியிடம் சிலகாலம் வளர்ந்தார். அவர் பாட்டி சொன்ன இதிகாசப் புராணக் கதைகள், நாட்டில் வாழ்ந்த வீர மரபினர் வரலாறுகள்தாம், பிற்காலத்தில குழந்தைகளுக்கான கதைகள் எழுதுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தன. பள்ளியில் சிறப்பாகப் படித்த பெ.தூரன், மேல்படிப்புக்குச் சென்னை வந்தார். 1926-1931 வரை மாநிலக் கல்லூரியில் பயின்றபோது மகாத்மா காந்தியின் கொள்கைகள், பேச்சு, நாட்டுப்பற்றுக் கனலை இளைஞர்கள் இதயத்தில் மூண்டெழச் செய்தது. அந்தக் கனலிடைப் புகுந்த தூரன் பி.ஏ. இறுதியாண்டுத் தேர்வை எழுதாமல் புறக்கணித்தார்.

பெ.தூரனின் இதயத்தில் நாட்டுப்பற்றும், இலக்கிய ஆர்வமும், "வனமலர்ச் சங்கம்' என்ற இலக்கிய அமைப்பை ஏற்படுத்த வைத்தது. பத்திரிகையாளராக வேண்டும் என்ற துடிப்பும் சேர்ந்தது. "பித்தன்' என்ற இதழைத் தொடங்கினார்.




https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZU0luly.TVA_BOK_0006306/page/3/mode/2up

தமிழ்முனிவர் திரு.வி.க.வின் சாது அச்சுக் கூடத்தில் "பித்தன்' இதழ் அச்சிடப்பட்டது. அதனால் தமிழ்த் தென்றல் திரு.வி.க.வைச்

சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டதுடன் தமிழ் இலக்கியங்களைக் கற்கும் ஆர்வமும் ஏற்பட்டது. குறிப்பாக மகாகவி பாரதியாரின் இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். ஈடுபாடு பக்தியாக வளர்ந்தது. அந்த பக்திதான் பிற்காலத்தில் தமிழர்களுக்கு அரிய கருவூலத்தைத் திரட்டித் தர வழி வகுத்தது. பாரதி பணியாற்றிய சுதேசமித்திரன் அலுவலகம் சென்று பாரதியார் படைப்புகளைத் தொகுக்கத் தொடங்கினார்.

இளைஞர் பெ.தூரனின் இந்த ஆர்வம் பாரதியின் எழுத்துகள் (உரைநடை - கட்டுரைகள்) பெரும்பாலானவற்றைச் சேகரித்து "பாரதி தமிழ்' என்ற தொகுப்பைப் பிற்காலத்தில் வெளியிட வழிவகுத்தது.



தேசியப் போராட்டம் காரணமாக 1931-இல் பட்டப்படிப்பைத் துறந்தாலும், கோபிசெட்டிப்பாளையம் "வைரவிழா' பள்ளியில் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். வாய்ப்பு ஒன்றன் பின் ஒன்றாய் அவரை வந்தடைந்தன.

தேசத் தலைவர் தி.சு.அவிநாசிலிங்கம் செட்டியார் தொடங்கியிருந்த ராமகிருஷ்ண வித்யாலயத்தில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார். அந்தச் சூழ்நிலையில் கவிதை, கட்டுரை எழுதும் ஆர்வம் அவருக்கு வளர்ந்தது. பிறவியிலேயே கவி உள்ளம் படைத்த பெ.தூரன் தமிழில் பாடல்கள் (கீர்த்தனைகள்) புனையத் தொடங்கினார். பிற்காலத்தில் இவரது கீர்த்தனைகள், ஸ்வர, தாள இசைக் குறிப்புகளுடன் தொகுதிகளாக வந்துள்ளன.

கட்டுரை எழுதுவது தனிக்கலை. எந்தப் பொருளைப் பற்றி

எழுதுவதானாலும் அவற்றைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றி முற்றிலும் அறிந்து கொள்ள வேண்டும். தூரன், ஒவ்வொரு பொருளையும், மனிதரையும், பறவைகளையும் கூர்ந்து கவனிக்கும் ஆற்றல் பெற்றிருந்ததால், அவர் எழுத்துகளில் நுணுக்கமாகச் செய்திகள் விவரிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். அதைப்பற்றி தூரன் ஆடு மேய்க்கும் சிறுவனுடன் நடத்திய உரையாடலில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.



தூரன் எழுதிய மின்னல்பூ, நிலைப்பிஞ்சு, இளந்தமிழா போன்ற கவிதைத் தொகுதிகள் மறக்க முடியாதவை. 1949-ஆம் ஆண்டு வெளிவந்த "இளந்தமிழா' கவிதைத் தொகுப்பு சிறந்த கவிஞர் என்னும் நற்பெயரைப் பெற்றுத் தந்தது.


"கதையைப் படிப்பது போலக் கவிதைகளைப் படிக்கக் கூடாது. பலதடவை படிக்க வேண்டும்' என்று அவர் அடிக்கடி கூறும் வரிகள் அவர் சிறந்த ரசிகர் என்பதைத் தெரிவிக்கின்றன. அவை, இன்றைய கவிஞர்கள் சிந்திக்க வேண்டிய கருத்தாகும். கவியரங்குகளில் கவிதையில் ஒரே வரியைத் திருப்பித் திருப்பிச் சொல்வதை அவர் குறிப்பிடவில்லை! சொல்லப் போனால், ரசிகமணி டி.கே.சி. பாணியில் பலமுறை கவிதையைச் சொல்வதால் கவிதை மனதில் ஆழப்பதிந்து விடுகிறது. நயமும் பொருளும் மனதில் பதிகின்றன.

சிறுகதை இலக்கியத்திலும் அவர் தன் முத்திரையைப் பதித்தார். பெரியசாமித்தூரனின் சிறுகதைகள் ஐந்து தொகுதிகள் வெளிவந்துள்ளன. "கரிசல் மண் கதைகள்', "வண்டல் மண் கதைகள்' தமிழ் மக்களிடையே பிரபலப்படுத்தப் பட்டிருக்கின்றன. கொங்கு நாட்டு மணம் கமழச் செய்த எழுத்தாளர் ஆர்.சண்முகசுந்தரத்தைப் பலர்

நினைப்பதில்லை. அவருக்குப் பிறகு பெ.தூரன் எழுத்துகளில் அந்த மணம் வீசக் காணலாம். கொங்கு நாட்டுக் கிராம மக்களின் வாழ்க்கை, குணங்கள், அறநெறிகள், மரியாதை கலந்த உரையாடல்கள் அவருடைய கூரிய ஆழ்ந்த பார்வை யாவும் கதை மாந்தர்களில் பிரதிபலிக்கக் காணலாம்.

பெ.தூரன் செய்த மகத்தான பணிகள் இரண்டு. முதலாவது, பாரதியாரின் படைப்புகளைத் தேடிப் பிடித்து "பாரதி தமிழ்' என்ற நூலை வெளியிட்டது. கல்லூரியில் படிக்கும் போதே சுதேசமித்திரன் அலுவலகம் சென்று பழைய இதழ்களின் "நெடி-தூசு' இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு, பத்து ஆண்டுகளில் வெளிவந்த பாரதியின் எழுத்துகளைத் தேடிப்பிடித்து ஏறத்தாழ 134 தலைப்புகள் கொண்ட "பாரதி தமிழ்' என்ற நூலை வெளியிட்ட பணி. பாரதி இலக்கிய ஆய்வாளர்களுக்கு அந்தத் தொகுப்பு ஒரு கருவூலம்.

அடுத்த சாதனை, "கலைக் களஞ்சியம்' தயாரித்தது. தமிழ் மொழிக்கே அது தனிப் பெருமை. சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஆ.சிங்காரவேலு முதலியார் "அபிதான சிந்தாமணி' தமிழ்க் கலைக்களஞ்சியம் என்ற பெயரில் கலைக்களஞ்சியம் தயாரித்தார். அதில் பழைய புராணச் செய்திகளுக்கே முதன்மை இடம் தரப்பட்டிருந்தது. மெத்த வளரும் புத்தம் புதுக் கலைகளைத் தமிழிலும் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்துடன் மேனாள் கல்வி அமைச்சர் தி.சு. அவிநாசிலிங்கம் செட்டியார், "கல்கி' போன்றோரின் அரிய முயற்சியால் "தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்ற ஓர் அரிய அமைப்பு உருவானது.



ஆங்கில மொழிக்குப் பெருமை சேர்ப்பது அம்மொழியில் மிகத் துல்லியமாகத் தயாரிக்கப்பட்ட பல்வேறு கலைக்களஞ்சியங்களே! "புக் ஆஃப் நாலெட்ஜ்' "என்சைக்ளோபீடியா', "பிரிட்டானிக்கா' என்றெல்லாம் பெருமையாகப் பேசப்படும் "தகவல் அகராதி' அவற்றுக்கு இணையாகத் தமிழில் கலைக்களஞ்சியம் உருவாக்கத் திட்டமிட்டனர். தமிழ் வளர்ச்சிக் கழகம் பிரதான ஆசிரியராக தூரனை நியமித்தது.

பழந்தமிழ் இலக்கியங்களை ஏட்டுச் சுவடியிலிருந்து தயாரிக்கும் பணியில் உ.வே.சா., ஈடுபட்டதுபோல, அறிஞர் பெரியசாமித்தூரன் பொறுமையுடன், சலிப்பின்றி, ஊக்கத்துடன் கலைக்களஞ்சியத்தைத் தயாரித்ததற்குத் தமிழுலகம் காலா காலத்துக்கும் நன்றி உடையதாக இருக்க வேண்டும். காந்தியச் செல்வர் பொ.திருகூடசுந்தரம் போன்ற அறிஞர்களின் பேருதவியுடன் கலைக்களஞ்சியம் தயாரிக்கப்பட்டது.

"கலைக்களஞ்சியம்' நிறைவேறிய பிறகு, தொடர்ந்து குழந்தைகள் கலைக்களஞ்சியம் தொகுக்கும் பணி தொடங்கப்பட்டது. அந்தப் பணியும் தூரனிடமே ஒப்படைக்கப்பட்டது. கலைக்களஞ்சியம் நிறைவடையும் போதே உடல் நலம் குன்றியிருந்த தூரனின் ஆர்வமே குழந்தைகளுக்குக் கலைக்களஞ்சியம் உருவாக்கித் தந்தது.

கவிதைத் தொகுதிகள் நான்கு, சிறுகதைத் தொகுதிகள் மூன்று, கட்டுரைத் தொகுதிகள் மூன்று, நாடகங்கள் ஏழு, தமிழ் இசைக் கீர்த்தனைகள் எட்டு, குழந்தைகளுக்கு பதினைந்து, பாரதி இலக்கியத் தொகுப்பு பதினொன்று, அறிவியல் ஆராய்ச்சி நூல்கள் ஆறு என அவருடைய படைப்புப் பட்டியல் பிரமிக்க வைக்கிறது.

பத்மபூஷண், கலைமாமணி என்ற பெரும் விருதுகளைப் பெற்ற படைப்பிலக்கியச் சிற்பியும் அறிஞருமான ம.ப. பெரியசாமித்தூரன், 1987-ஆம் ஆண்டு ஜனவரி 20-ஆம் தேதி தமிழ்த்தாயின் திருவடிகளை அடைந்தார்.

கலைக்களஞ்சியம் உள்ள வரையில் தமிழுலகம் அவரை மறக்காது.

செம்மல் பெரியசாமி தூரனின் செந்தமிழ்ப் பணிகள்

https://s-pasupathy.blogspot.com/2016/09/1_25.html

செ. இராசு



செப்டம்பர் 26. பெரியசாமி தூரனின் பிறந்த நாள்.

தமிழின் அனைத்துத் துறைகளிலும் பன்முக மாட்சியுடைய பற்பல நூல்களைப் படைத்துப் பெரும்பணி செய்த அறிஞர் ம.ப. பெரியசாமித் தூரன். ஈரோடு வட்டத்தில் மொடக்குறிச்சியை அடுத்த மஞ்சக்காட்டுவலசு என்னும் சிற்றூரில் பழனிவேலப்ப கவுண்டர் - பாவாத்தாள் தம்பதியினருக்கு 1908ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26ம் நாள் பிறந்தவர் பெரியசாமி. கொங்கு சமுதாயத்தின் வரலாற்று நாயகர்களான அண்ணன்மார், பொன்னர் - சங்கர் இருவரும் பெரியசாமி, சின்னச்சாமி என்று அழைக்கப்பட்டனர். மேழிப்பள்ளி பொன்னர் நினைவால் இவருக்குப் பெரியசாமி என்று பெயர் வைக்கப்பட்டது.

இளம் வயதிலேயே தாயாரை இழந்த தூரன் செம்மாண்டம்பாளையம் பாட்டி வீட்டில் வளர்ந்தார். மொடக்குறிச்சியில் தொடக்கக்கல்வி முடித்து ஈரோடு மாசன உயர்நிலைப்பள்ளியில் பள்ளியிறுதி வகுப்பவரை படித்தார். தமிழாசிரியர் திருமலைசாமி அய்யங்கார் பாடம் கற்பிக்கும் நேரம் அல்லாமல் மற்ற நேரமும் மாணவர்களுக்குத்

தமிழ் அறிவை ஊட்டுபவர். "அவரால் எனக்குத் தமிழில் பற்றும் கவிதை எழுத வேண்டும் என்ற ஆர்வமும் ஏற்பட்டது," என்று கூறியுள்ளார் தூரன்.

இளவயதில் சித்தப்பா அருணாசலக்கவுண்டர் கூறிய கதைகளும், இன்னொரு உறவினர் அருணாசலக்கவுண்டர் கற்றுக் கொடுத்த இசைப்பாடல்களும் தூரனுக்குக் கதை, இசை ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தது.

கணக்கில் மிகுந்த ஆர்வமுடைய தூரன் "மின்சாரம் அப்பொழுது இல்லாததால் தெருவில் உள்ள மண்ணெண்ணெய் விளக்கின் அடியில் முக்கோணமும் வட்டமும் வரைந்து கணக்குப் படித்தேன்,"என்று கூறியுள்ளார். விடுதி வசதி இல்லாததால் ஒரு கன்னடிய நாயக்கர் வீட்டில் தங்கி உணவுண்டு படித்தார். மாணவப் பருவத்தில் ஈரோடு கருங்கல்பாளையம் நூலகம் சென்று ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி அய்யங்கார் முதலியோர் எழுதிய நாவல்களைப் படிப்பதை வழக்கமாகக் கொண்டார்.


மாணவப் பருவத்திலேயே பாட்டி கற்றுக் கொடுத்து அளித்த இராட்டையில் நூற்று பெரியார் தம் வீட்டில் நடத்திய கதர்க் கடையில் நூல் சிட்டங்களைக் கொடுத்து கதர் வாங்கி அணிவதை வழக்கமாக்கிக் கொண்டார். 01.05.1939ல் காளியம்மாளை மணம் செய்து கொண்ட தூரனுக்கு;

சாரதாமணி , *வசந்தா, விஜயலட்சுமி*
ஆகிய பெண்மக்களும்,
சுதந்திரக்குமார் என்ற மகனும் உள்ளனர்
மருமகள் செண்பகத்திலகம்.

1926 - 27ல் **சென்னை மாநிலக் கல்லூரியில்,**
கணிதம், *இயற்பியல், வேதியியல்*
பாடம் எடுத்து இன்டர்மீடியட் தேர்ச்சி பெற்று 1929ல் **கணிதத்தில் பி.ஏ. தேர்ச்சி பெற்று ஆசிரியப் பயிற்சியும் (எல்.டி.) பெற்றார். சென்னையில் கல்லூரிக் கல்வி கற்கும்போதே சக மாணவர்கள்**
சி. சுப்பிரமணியம், *நெ.து. சுந்தரவடிவேலு, ஓ.வி. அளகேசன்,*
இல.கி. முத்துசாமி, *கே.எம். இராமசாமி, கே.எஸ். பெரியசாமி*
கே.எஸ். பழனிசாமி
ஆகியோருடன் இணைந்து "வனமலர்ச் சங்கம்" என்ற அமைப்பைத் தோற்றுவித்து பாரதி பாடல்களைப் பரப்பவும், தேசியப் போராட்டத்திற்கு வலு சேர்க்கவும் "பித்தன்" என்ற மாத இதழை நடத்தத் தூரன் காரணமாக இருந்தார்.

1929 முதல் நான்காண்டுகள் கோபிசெட்டிபாளையம் வைரவிழா உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றியபின் போத்தனூரிலும், பின்னர் பெரியநாயக்கன்பாளையத்தில் இயங்கிய

இராமகிருஷ்ணா வித்யாலயத்தில் சேர்ந்து ஆசிரியராகவும், தலைமையாசிரியராகவும் 1948 வரை பணியாற்றினார். அப்போது நேர்முகமாகச் சிலரிடம் இசைப்பயிற்சி பெற்றார். ஆங்கிலத்தில் வெளிவந்த "டைம்" இதழ் அமைப்பில் "காலச்சக்கரம்" என்ற இதழை பொள்ளாச்சி அருட்செல்வர் நா. மகாலிங்கத்தின் தந்தையார் ப. நாச்சிமுத்துக்கவுண்டர் ஆதரவுடன் தொடங்கிப் பல்சுவை இதழாக நடத்தினார்.



அவ்விதழில் பெரும்புலவர் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் துணையுடன்,
காளமேகப் புலவரின் சித்திரமடல்
வடிவேல் பிள்ளையின் மோகினிவிலாச நாட்டிய நாடகம்
அவிநாசிப் புலவரின் திங்களூர் நொண்டி நாடகம்
சாமிநாதக் கவிஞரின் கொன்றைவேந்தன் வெண்பா

ஆகியவைகளைப் பதிப்பித்தார். அப்போதைய தமிழகக் கல்வியமைச்சர் தி.சு. அவிநாசிலிங்கம் முயற்சியால் தமிழ் வளர்ச்சிக்காகத் தொடங்கப்பட்ட தன்னாட்சி உரிமை உடைய தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட "கலைக்களஞ்சிய"த்தின் ஆசிரியராக 1948ல் பொறுப்பேற்று 1968 வரை 750க்கு மேற்பட்ட பக்கங்களையுடைய 10 தொகுதிகளை வெளியிட்டார். இந்தியாவிலேயே முதன்முதலாகக் கலைக்களஞ்சியம் வெளிவந்தது தமிழ்மொழியில்தான். பிறகு 100 பக்கங்களையுடைய குழந்தைகள் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளையும் 1976 வரை வெளியிட்டார்.

கல்லூரியில் படிக்கும்போதே திரு.வி.க.வின் அறிவுரைப்படி 1904 முதல் 1921 வரை சுதேசமித்திரன் இதழில் பாரதியார் எழுதிய கவிதை - கட்டுரைகளை மிக அரிதின்

முயன்று தொகுத்தார். கடுமையாக முயன்று 140 தலைப்புகளில் வெளிவராத பாரதியாரின் கவிதை கட்டுரைகளைக் காலமுறைப்படி தொகுத்து "பாரதி தமிழ்" என்று வெளியிட்டார். பாரதியார் படைப்பில் இது மூன்றில் ஒரு பகுதியாகும்.

கொங்கு வேளாளரில் இவர் "தூரன்" குலம் சார்ந்தவர் ஆனதால் "தூரன்" என்று பெயரில் இணைத்துக் கொண்டார். ஆனால் தமிழில் தொலைநோக்குப் பார்வை உடையவர் என்றும் அப்பெயரைக் கருதலாம்.

இவருடைய கதைத் தொகுதிகளாக

மாவிளக்கு
உரிமைப் பெண்
காலிங்கராயன் கொடை
தங்கச்சங்கிலி,
பிள்ளைவரம்
தூரன் எழுத்தோவியங்கள்

என ஆறு வந்துள்ளன. பெரும்பாலும் கொங்கு மண் மணம் கமழும்படியாகவே எழுதியுள்ளார்.

கொங்கு நாட்டு ஊர்களும், பெயர்களுமே அவற்றில் இடம் பெறும்.

தேன்சிட்டு
பூவின் சிரிப்பு
காட்டுவழிதனிலே

முதலிய கட்டுரை நூல்களில் 50 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவ்வளவும் சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள்,

மதம் அவசியமா?
மௌனப் பெரும் பேச்சு
என்பன சில தலைப்புகள்,
கானகத்தின் குரல்
கடல் கடந்த நட்பு
பறவைகளைப் பார்

முதலியன மொழிபெயர்ப்பு நூல்கள். தாகூரின் கவிதைகளையும் மொழிபெயர்த்துள்ளார். காற்றில் வந்த கவிதை என்பது நாட்டுப்புறத் தொகுப்பாகும்.

நாடக நூல்களாகக்,
காதலும், கடமையும்
அழகு மயக்கம்
சூழ்ச்சி
மனக்குகை
ஆதிமந்தி
பொன்னியின் தியாகம்
இளந்துறவி

ஆகியவைகளை எழுதியுள்ளார். இவை நாடகமாக நடிக்கத் தகுதியானவை.

இசைப்புலமை வாய்க்கப் பெற்ற தூரன்,

கீர்த்தனை அமுதம்
இசைமணி மஞ்சரி
முருகன் அருள்மணிமாலை
நவமணி இசைமாலை
இசைமணி மாலை
கீர்த்தனை மஞ்சரி

ஆகிய இசை, கீர்த்தனை நூல்கள் இயற்றியுள்ளார். கடைசி இரண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாகும்.

தமிழகத்தின் மிகப்பெரிய இசைவாணர்கள் தூரன் பாடல்களை மேடையில் பாடியுள்ளனர். இசைக் கல்லூரிகளில் சில பாடமாக வைக்கப்பட்டுள்ளன. டைகர் வரதாச்சாரியார், கல்கி போன்றவர்கள் தூரனின் இசைப் புலமையைப் புகழ்ந்துள்ளனர்.

குழந்தைகளுக்கு கதையாக, பாடலாக, நெடுங்கதையாக, அறிவியல் முறையில் 14 நூல்களைத் தூரன் இயற்றியுள்ளார்கள். "பச்சைக் குழந்தையெனில் எனக்கொரு பாசம் பிறக்குதம்மா," என்று குழந்தையை நேசிக்கும் தூரன் ஏழைச் சிறுவர், சிறுமியர் விளையாட்டைக் கண்முன் நிறுத்துகிறார். விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் "ஓடிவா கஞ்சிகுடி, மண்வெட்டப் போகணுமாம் பண்ணையார் ஏசுகிறார்," என்று ஓடுகின்றன. "துன்பத்தில் தோன்றி தொழும்பே வடிவானோர்க்கு இன்ப விளையாட்டும் இல்லையோ இவ்வுலகில்," என்று வினவுகிறார் தூரன்.

காந்தியடிகளும், பாரதியாரும் தூரனை ஈர்த்த இரு பெருமக்கள். பாரதியார் படைப்புகள் பற்றிப் பதினொரு நூல்கள் எழுதியுள்ளார். உளவியல் தத்துவம் தொடர்பாக ஒன்பது நூல்கள் எழுதியுள்ளார்.

தூரனுடைய

இளந்தமிழா
மின்னல்பூ
நிலாப்பிஞ்சு
தூரன் கவிதைகள்
பட்டிப்பறவை

ஆகிய நூல்களில் இயற்கையை நேசிக்கும் இனிய பாடல்களையும் எளிய நடையையும் எங்கும் காணலாம்.

"ஞாயிறே இருளை என்ன செய்து விட்டாய்?
ஓட்டினாயா? கொன்றாயா? விழுங்கிவிட்டாயா?'"

என்று வினவுகிறார்.

1980ம் ஆண்டு கடுமையான வாத நோயால் வாடியவர் 1987ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் நாள் தன் தமிழ்ப்பணியை, தமிழ் மூச்சை நிறுத்திக் கொண்டார்.

கவிதைகளில் பாரதியாரின் தாக்கத்தைக் காணுகிறோம். தமிழின் அனைத்துத் துறைகளுக்கும் தூரன் செய்த பணி மிகப் பெரியது. இந்திய அரசின் "பத்மபூஷண்", தமிழக அரசின் "கலைமாமணி" விருதும் பெற்றுள்ளார். தமிழ் எழுத்தாளர் சங்கம், குழந்தை எழுத்தாளர் சங்கத்துடன் தொடர்பு கொண்டவர்.

அறிவுத் துறைகளைத் தமிழுக்குத் தூரன் புதுமையாகப் படைத்துள்ளார். தமிழக அரசு அவருடைய நூல்களையெல்லாம் நாட்டுடைமையாக்கியுள்ளது.

பெரியசாமி தூரன்

தமிழகத்தின் உண்மையான பெரியார்

https://tamilhindu.com/2009/10/periyasamy-thooran-a-tribute/

செப்டம்பர் 26 அன்று, லட்சக்கணக்கான தமிழர்களால் 'தூரன்' என்று அன்போடும் மரியாதையோடும் அழைக்கப்பட்ட திரு.பெரியசாமி தூரன் அவர்களின் நூற்றாண்டு நிறைவடைந்தது. அவருடைய நூற்றியோராவது பிறந்த தினம் கடந்து சென்றுவிட்டாலும், நம் மனதில் என்றும் நிறைந்திருக்கிறார் அன்றோ! சில தவிர்க்க முடியாத காரணங்களால் என்னால் இந்த சிறு கட்டுரையைத் தமிழ் இந்து தளத்திற்கு சரியான சமயத்தில் அனுப்பமுடியாமல் போனதை நான் செய்த குற்றமாகக் கருதி அந்தப் பெரியவரின் ஆன்மாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.



இசை மற்றும் இலக்கிய உலகில் பெரிதும் போற்றப்பட்ட திரு. பெரியசாமி தூரன் அவர்கள், அவ்விரண்டின் வளர்ச்சிக்கும் மாபெரும் சேவை செய்துள்ளார்கள். தன்னுடைய காலத்தை வென்ற படைப்புகளின் மூலம் இசை மற்றும் இலக்கியங்களுக்கு மெருகூட்டியிருக்கிறார்கள். ”தூரன் என்றால் தமிழ்; தமிழ் என்றால் தூரன்” என்று சொன்னால் அது மிகையாகாது. தூரன் என்ற பெயர் சொன்னாலே அது “கலைக்களஞ்சியம்” என்று சொல்லப்பட்ட “தமிழ் அபிதான சிந்தாமணி”யைத்தான் (தமிழ் என்ஸைக்ளோபீடியா) குறிக்கும். ஏனென்றால், கடுமையாக உழைத்து அதைப் பத்து தொகுதிகளாக தமிழுலகிற்கு அளித்த கொடை வள்ளல் அல்லவா அவர்? குழந்தை இலக்கியத்திற்குப் பங்காற்றியதன் மூலமும் நம்மால் நினைவுகூறத் தக்கவர் தூரன்.

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி என்ற ஊரில், பழனிவேலப்ப கவுண்டர் – பாவாத்தாள் தம்பதியருக்கு, 1908 செப்டம்பர் 26–ல் பிறந்த தூரன், சென்னை மாநிலக் கல்லூரியில் கணிதத்தில் இளங்கலைப் பட்டம் பெற்று பின்னர், ஆசிரியர் பயிற்சியும் (L.T. – Licentiate in Teaching) பெற்றார். தன்னுடைய இளைய பருவத்தில், தேசிய-மஹாகவி பாரதியான் பால் ஈர்க்கப்பட்டு, மஹாத்மா காந்தியினாலும் ஊக்கம் கொண்டார். சிறந்த தேசபக்தராக இருந்த காரணத்தால், ஆங்கிலேய அரசாங்கம் விடுதலை வீரர் பகத் சிங்கைத் தூக்கிலிட்டதைக் கண்டித்து, கல்லூரியில் இறுதியாண்டுத் தேர்வைப் புறக்கணித்தார்.

தமிழ் மொழி வளர்ச்சி மற்றும் அறிவியக்கத்திற்கு இவர் ஆற்றியுள்ள பங்கு ஒப்பிடலுக்கு அப்பாற்பட்டது. முக்கியமாக, ஐந்து கவிதை நூல்களும், ஏழு நாடக நூல்களும், ஐந்து கதைத் தொகுதிகளும், மூன்று கட்டுரைத் தொகுப்புகளும், ஆறு இசை நூல்களும், மூன்று மொழிபெயர்ப்பு நூல்களும், மற்றும் பல நூல்களும் படைத்து அளித்துள்ளார்கள். உளவியல் துறையில் (Psychology) “குழந்தை உள்ளம்”, மரபணுவியல் துறையில் (Genetics)

"பாரம்பரியம்", கருத்தரித்தல் பற்றிய அறிவியல் துறையில் (Embryology) "கருவில் வளரும் குழந்தை" போன்ற அற்புத படைப்புகளும் வழங்கியுள்ளார் திரு தூரன். அவருடைய படைப்புகளில் இளந்தமிழன், மின்னல் பூ, தங்கச் சங்கிலி, பிள்ளை வரம், தேன் சிட்டு, பூவின் சிரிப்பு ஆகியவைக் குறிப்பிட்டுச் சொல்லும்படியானவை. பொன்னியின் தியாகம், அழகு மயக்கம் ஆகியவை அருமையாகப் படைக்கப்பட்ட நாடகங்கள். குழந்தைகளுக்காகப் பல பாடல்கள், மிருகங்கள் பற்றிய கதைகள், மற்றும் பல புத்தகங்கள் எழுதியுள்ளார்.

பார்க்க: **பெ.தூரன் இயற்றிய கீர்த்தனைகள் (மின் நூல்)**

திரு.தூரன் அவர்கள், நாட்டுப்புறப் பாடல்களும், கர்னாடக இசைக் கீர்த்தனைகளும், ஸ்வரங்களும் இயற்றியுள்ளார். டி.கே.பட்டம்மாள், செம்மங்குடி ஸ்ரீனிவாச ஐயர், என்.சி.வசந்தகோகிலம், டி.வி.சங்கரநாராயணன், டைகர் வரதாச்சாரியார், முசிறி சுப்ரமணிய ஐயர், போன்ற இசையுலக ஜாம்பவான்கள், இவருடைய இசையறிவை மெச்சி, இவர் இயற்றிய பாடல்களுக்கு அடிமைகளாகவே இருந்து, தங்கள் கச்சேரிகளில் அவற்றைப் பாடாமல் இருந்ததில்லை என்று சொல்லலாம். 'சாரங்கா' ராகத்தில் அமைந்த "ஞானநாதனே", 'பிருந்தாவன சாரங்கா'வில் அமைந்த "கலியுக வரதன்", 'மாண்ட்' ராகத்தில் அமைந்த "முரளீதரா கோபாலா", 'சாவேரி'யில் அமைந்த "முருகா முருகா", 'காபி'யில் பாடிய "பழனி நின்ற", 'கீரவாணி'யில் அமைந்த "புண்ணியம் ஒரு கோடி", 'சுத்த சாவேரி' ராகத்தில் அமைந்த "தாயே திரிபுரசுந்தரி" ஆகியவை இவர் இயற்றியுள்ள மயங்கவைக்கும் கீர்த்தனைகளில் சில.

பெரியசாமி தூரன் அவர்கள் செய்துள்ள மொழியாக்கங்களில், ஜாக் லண்டன் அவர்களின் "Call of the Wild" (கானகத்தின் குரல்), நாவோமி மிட்சின்ஸனின் "Judy and Lakshmi" (காதல் கடந்த நட்பு) ஆகியவை குறிப்பிட்டுச் சொல்லப்படுபவை. இவர், "பாரதி தமிழ்" மற்றும் "தாகூரின் ஐம்பெரும் கட்டுரைகள்" ஆகிய நூல்களுக்கு தொகுப்பாசிரியராக (Editor) இருந்து வெளியிட்டுள்ளார். மேலும் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டிருந்த சில கவிதைகள் மற்றும் நாடகங்களையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். மஹாகவி பாரதியாரின் பன்முகத் தோற்றத்தையும் ஆளுமையையும், அருமையான முறையில் அலசி ஆராய்ந்து, இவர் வெளிக் கொணர்ந்த பத்து தொகுதிகள், நவீனத் தமிழ் இலக்கியத்திற்கு இவர் ஆற்றியுள்ள தொண்டுகளில் மிகச்சிறந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

1948-லிருந்து 1978 வரை தலைமைத் தொகுப்பாசிரியர் பொறுப்பில் கடுமையாக ஓய்வின்றி உழைத்து பத்து தொகுதிகள் கொண்ட தமிழ்க் கலைக் களஞ்சியத்தை இவர் தயாரித்தது மிகச் சீரிய பணியாகும். அதைத் தொடர்ந்து குழந்தைகளுக்கான ஒரு கலைக் களஞ்சியத்தையும் பத்து தொகுதிகளுடன் படைத்தார்.

டி.அவினாசிலிங்கம் செட்டியார் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்தபோது, செட்டியார் மனமுவந்து அளித்த முப்பது ரூபாய் மாதச் சம்பளத்தை அதிகம் என்று மறுத்து வெரும் பதினைந்து ரூபாய் மட்டுமே பெற்றுக் கொண்டு பணியாற்றினார். இந்திய அரசு இவருக்கு 1968-ல் பத்ம பூஷண் விருதளித்துக் கௌரவித்தது. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 1970-ல் கலைமாமனி விருதும், 1972-ல் தமிழ் இசை சங்கம் இசைப்பேறறிஞர் பட்டமும், 1978-ல் எம்.எ.சி.அறக்கட்டளைகள் அண்ணாமலை செட்டியார் விருதும் அளித்து கௌரவித்தன. பாரதீய வித்யா பவனும், சாகித்ய அகாதமியும் இணைந்து தொண்டில் கனிந்த தூரன் என்ற பெயரில் அவரின் வாழ்க்கை பற்றிய புத்தகத்தை அவருடைய நூற்றாண்டான சென்ற வருடத்தில் வெளியிட்டு கௌரவித்தன.

“தூரனும் அவருடைய குடும்பத்தாரும், திருவண்ணாமலை யோகி ராம்சுரத்குமார் அவர்களின் பக்தர்களாவர். யோகியைப் போற்றி திரு.தூரன் அவர்கள் எழுதியுள்ள பாடல்கள் பல வித்வான்களால் பாடப் பெற்றுள்ளன. அப்பாடல்கள் புத்தகங்களாகவும் வந்துள்ளன. யோகி ராம்சுரத்குமார் அவர்கள் முன்னிலையில் தூரன் அவர்களிடமிருந்து பாடல்கள் மடை திறந்த வெள்ளம் போல் பெருகி வரும்” என்று பெங்களூரைச் சேர்ந்த துறவியும், சமூக சேவகருமான சாது ரங்கராஜன் அவர்கள் நெகிழ்ந்து கூறுகிறார்கள்.

உண்மையாக தமிழுக்குப் பெரும் தொண்டாற்றியுள்ள துரன் அவர்களின் நூற்றாண்டு விழாவை அதற்கு ஏற்ற முக்கியத்துவம் அளித்துக் கொண்டாடாமல், தற்போதைய தமிழக அரசாங்கம் அலட்சியம் செய்ததில் ஆச்சரியப் பட ஒன்றுமில்லை. பகுத்தறிவு பேசும் திராவிட மண்ணில் துரைகளுக்குத்தான் நூற்றாண்டு விழாவே தவிர தூரன்களுக்கு இல்லை. துரைகளைத் தூக்கி வைத்துக் கொண்டாடுவார்கள்; தூரன்களைத் தூரத் தள்ளி ஒதுக்கி வைப்பார்கள்.

தமிழைக் காட்டுமிராண்டி பாஷை என்றும் தமிழர்களைக் காட்டுமிராண்டிகள் என்றும் தூற்றி, தமிழகத்தைத் தேசிய நீரோட்டத்திலிருந்து பிரிக்கும் நோக்கில் வேலை செய்த ஈ.வெ.ரா வைத் தான் பெரியார் என்று சொல்வார்களேயன்றி, தமிழைத் தன் உயிராக

நினைத்து அதன் வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றிய தூரனைக் கண்டு கொள்ள மாட்டார்கள். இவரும் அதே ஈரோடு மண்ணிலிருந்து வந்தவர் தான்.

பெரியசாமி தூரனை இனவெறியாளர்கள் மறந்துவிட்டுப் போகட்டும். நமக்குக் கவலை இல்லை. உண்மையான தமிழர்கள் உள்ளத்தில் தூரன் என்றும் தமிழ்ப் பெரியாராக மங்காப் புகழுடன் குடியிருப்பார். தூரன் புகழ் வாழ்க! அவர்தம் பெருமை வளர்க!

நினைவுகள், வாழ்க்கை வரலாறுகள், ஆய்வுகள்

நவீனத் தமிழ் அறிவியக்கத்தின் தலைமை ஆளுமைகள் என்று சொல்லத்தக்க மிகச்சிலரில் ஒருவர் பெரியசாமித் தூரன். அரசியல் காரணங்களால் தூரனைப் போன்ற ஒரு மேதை உரிய முறையில் கௌரவிக்கப்படவில்லை. அவருக்கு தகுதியான நினைவுச் சின்னங்களும் அமைக்கப்படவில்லை. அவர் பிறந்த ஈரோட்டிலோ, அவர் வாழ்ந்த கோவையிலோ, தலைநகர் சென்னையிலோ அவருக்கு நினைவுச் சின்னம் என ஏதுமில்லை.

- தூரனைப் பற்றிய தொகை நூல் ஒன்றை பாரதீய வித்யா பவன், கோவை மையம் வெளியிட்டிருக்கிறது. சிற்பி பாலசுப்ரமணியம் தொகுப்பாசிரியராகவும், பேராசிரியர் இராம இருசுப்பிள்ளை, டாக்டர் ஐ.கெ.சுப்ரமணியம் ஆகியோர் இணையாசிரியர்களாகவும் செயல்பட, பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களின் முன்னுரையுடன் வந்திருக்கிறது இந்த நூல்.
- சிற்பி பாலசுப்ரமணியம் ம.ப. பெரியசாமித் தூரன்[2] என்னும் நூலை இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசைக்காக எழுதினார்
- தூரன் என்ற களஞ்சியம் ரா.கி.ரங்கராஜன் (கல்கி முன்னுரையுடன்)
- பெரியசாமித் தூரன் நினைவாக தமிழ் விக்கி இணையக் கலைக்களஞ்சியம் 2022 முதல் 'தமிழ் விக்கி- தூரன் விருது' வழங்குகிறது. இலக்கியம் -பண்பாடு துறைகளில் பங்களிப்பாற்றியவர்களுக்கான விருது இது.

விருதுகள்

- 1968 இந்திய குடியரசுத் தலைவர் வழங்கிய பத்ம பூஷன் விருது.

- 1970 தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம் வழங்கிய கலைமாமணி விருது.
- 1972 தமிழ் சங்கம் வழங்கிய, இசைப் பேரறிஞர் விருது.
- 1978 எம்.ஏ.சி. தொண்டு நிறுவனத்தால் வழங்கப்பட்ட அண்ணாமலை செட்டியார் விருது.

இலக்கிய இடம்

பெரியசாமித் தூரன் ஐந்து தளப் பங்களிப்புகளுக்காக நினைவுகூரப்படுகிறார்.

- பெரியசாமித் தூரனின் முதன்மைப் பங்களிப்பு தமிழின் முதல் முழுமையான நவீனக்கலைக்களஞ்சியத்துக்கு ஆசிரியராக இருந்து அவர் உருவாக்கியளித்தமைதான்.
- பாரதி ஆய்வாளர்களில் முன்னோடியாக அவர் மதிப்பிடப்படுகிறார்.
- தமிழிசைப் பாடல்களில் அவருடைய கொடை என்றும் வாழ்கிறது.
- குழந்தைக் கவிஞராக பெரியசாமித் தூரன் இன்றும் பயிலப்படுகிறார்.
- மரபுக்கவிஞராக பெரியசாமித்தூரன் நாமக்கல் கவிஞர் மரபு என்னும் பாரதிக்கு பிந்தைய கவிமரபைச் சேர்ந்தவர். தேசிய இயக்கப் பார்வை, இசைத்தன்மை கொண்ட எளிமையான மொழி, எளிய கட்டமைப்பு கொண்ட கவிதைகளை எழுதிய கவிஞர் அவர்.

அவிநாசிப் புலவர் இயற்றிய **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம்** (அல்லது திங்களூர் நொண்டி நாடகம்) என்பது 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு தமிழ் நாடக நூல் ஆகும். இது திங்களூர் அருள்மலைப் பெருமாள் மீது பாடப்பட்ட நொண்டிச் சித்தர் வகை நாடக இலக்கியம். இந்த நூல் பெரியசாமித் தூரன் போன்றவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

முக்கியத் தகவல்கள்:

- **ஆசிரியர்:** அவிநாசிப் புலவர்.
- **பொருள்:** திங்களூர் அருள்மலைப் பெருமாளைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, ஒரு நொண்டித் தன்மையுள்ள

நாயகன் தன் வாழ்க்கையை, பாவங்களை விவரித்து, பின் இறைவனின் அருளால் குணம் பெறுவதாக அமையும் கதை.

- **பதிப்பு:** பெரியசாமித் தூரன் தனது இதழில் பதிப்பித்த நூல்.
- **வரலாறு:** கொங்கு வேளாளர் குல வரலாற்றில் இந்த நாடகத்தின் சில பாடல்கள் மற்றும் ஆசிரியர் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.


கூடுதல் தகவல்கள்:
இந்த நூல் Archive.org-ல் மின்வடிவத்தில் கிடைக்கிறது.

கவிஞர் பெரியசாமித்தூரன்
நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

01.	அடி மனம்
02.	அருள் மலை நொண்டி
03.	அழகு மயக்கம்
04.	ஆதி அத்தி
05.	ஆனையும் பூனையும்
06.	இசைமணி மஞ்சரி
07.	இளந்தமிழா
08.	இளந்துறவி
09.	உரிமைப் பெண்
10.	ஓலைக்கிளி
11.	கடக்கிட்டி முடக்கிட்டி
12.	கடல் கடந்த நட்பு
13.	கருவில் வளரும் குழந்தை
14.	காட்டு வழிதனிலே

15.	காதலும் கடமையும்
16.	காலச் சக்கரம் (பத்திரிகை)
17.	காளிங்கராயன் கொடை & தங்கச் சங்கிலி (சிறுகதைத் தொகுதி)
18.	காற்றில் வந்த கவிதை
19.	கானகத்தின் குரல்
20.	கீர்த்தனை அமுதம்
21.	குமரப் பருவம்
22.	குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும்
23.	கொல்லிமலைக் குள்ளன்
24.	சங்ககிரிக் கோட்டையின் மர்மம்
25.	சூரப்புலி
26.	சூழ்ச்சி
27.	தம்பியின் திறமை
28.	தமிழிசைப் பாடல்கள் (15ஆம் தொகுப்பு)
29.	தமிழிசைப் பாடல்கள் (7ஆம் தொகுதி)
30.	தரங்கம்பாடித் தங்கப் புதையல்
31.	தாகூரின் ஐம்பெருங் கட்டுரைகள்
32.	தூரன் எழுத்தோவியங்கள்
33.	தூரன் கவிதைகள்
34.	தேன் சிட்டு
35.	நல்ல நல்ல பாட்டு
36.	நவமணி இசைமாலை
37.	நாட்டிய ராணி
38.	நிலாப் பிஞ்சு

64.	மின்னல் பூ
65.	முருகன் அருள்மணி மாலை
66.	மோகினி விலாசம்



2008 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் நாளில், இவரது படைப்புகளை, நாட்டுடைமை நூற்பட்டியலில் இணைத்தற்கான, தமிழ்நாடு அரசு அறிவித்த ஆணை.







தரங்கம்பாடித்
தங்கப் புதையல்

செந்தமிழ்ச் செல்வர்
ம. ப. பெரியசாமித் தூரன்

வானதி பதிப்பகம்
தி. நகர் - சென்னை-17

குமரப் பருவம்

பெ. தூரன்

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே - சென்னை 1.





காற்றில் வந்த கவிதை

பெ. தூரன்

இன்ப நிலையம்
மயிலாப்பூர் :: சென்னை-4.

ஓலைக் கிளி என்பது புகழ்பெற்ற கவிஞர் **பெரியசாமித்தூரன்** எழுதிய குழந்தைகளுக்கான ஒரு பிரபலமான சிறுகதை அல்லது கவிதை நூல் ஆகும். இது பழனியப்பா பிரதர்ஸ் மூலம் வெளியிடப்பட்டது. இந்த கதை, கொடுப்பதிலும் பிறர் மகிழ்ச்சியில் நாம் இன்பம் காண்பதிலும் உள்ள மகிழ்ச்சியை மையமாகக் கொண்டது.

முக்கியத் தகவல்கள்:

- **ஆசிரியர்:** பெரியசாமித்தூரன்
- **வகை:** குழந்தைகளுக்கான கதை/பாடல்
- **பதிப்பகம்:** பழனியப்பா பிரதர்ஸ்
- **மையப்பொருள்:** பிறருக்கு உதவுதல் மற்றும் பகிர்வின் மகிழ்ச்சி

இது குழந்தைகளிடையே மிகவும் பிரபலம் மற்றும் விக்கிமூலத்தில் வாசிக்கக் கிடைக்கிறது.

திருவடி தொழுகின்றோம்" என்பது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட ஒரு பக்திப் பாடலாகும். இது ஐந்தாம் வகுப்புத் தமிழ் பாடப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள புகழ்பெற்ற வாழ்த்துப் பாடலாகும், இதில் இறைவன் திருவடிகளை அன்புடன் தொழுது போற்றும் பக்தி உணர்வு வெளிப்படுகிறது.

பாடல் விளக்கம்:

- **பல்லவி:** "திருவடி தொழுகின்றோம் - அன்பொடு திருவடி தொழுகின்றோம்" - இறைவன் திருவடிகளை அன்புடன் வணங்குகிறோம்.
- **பொருள்:** இறைவனின் திருவருளைப் பெறவும், மன அமைதி மற்றும் மகிழ்ச்சியை அடையவும், தேவர்களும், முனிவர்களும், பக்தர்களும் அவனது திருவடிகளைத் தொழுது போற்றுகின்றனர்.
- **சிறப்பு:** இப்பாடல் இறைவனின் அன்பையும், அவனது திருவடிகளின் பெருமையையும் எளிய தமிழில் பாடுகிறது.

இது விநாயகர், சிவன் அல்லது பொதுவாக இறைவனை வணங்குவது போன்ற பல்வேறு பக்திப் பாடல்களிலும், சூழல்களிலும் பயன்படுத்தப்படும் ஒரு தொடராகும்.

"புண்ணியம் ஒரு கோடி புரிந்தேனோ" என்பது மஹாபெரியவாளைப் போற்றி பெரியசாமி தூரன் இயற்றிய புகழ்பெற்ற தமிழ் கீர்த்தனை. இது கீரவாணி ராகத்தில் அமைந்த, குரு அருளை வேண்டிப் பாடும் பக்திப் பாடல் ஆகும்.

பாடல் வரிகள் (சுருக்கம்):

- **பல்லவி:**
  - புண்ணியம் ஒரு கோடி புரிந்தேனோ - நான்
  - போற்றிடும் காமகோடி ஆசார்யாள் அருள் பெற!
- **அனுபல்லவி:**
  - எண்ணி எண்ணிப் பல ஜன்மம் தவம் புரிந்தேனோ - அந்த
  - ஏகாம்பர நாதர் அம்சமாய் வந்தவரை
- **சரணம்:**
  - மஹாபெரியவா அருளைப் பெற தான் கோடி புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று இந்த பாடல் கூறுகிறது.

இந்த பாடலை அருணா சாயிராம் போன்ற பல பிரபல கலைஞர்கள் பாடியுள்ளனர்.

"மானிடா எழுக" என்பது பெரும்பாலும் **ம.ப. பெரியசாமித் தூரன்** எழுதிய வசன கவிதை நூலை அல்லது விவிலியத்தில் (எசேக்கியேல்) வரும் "மானிடா, எழுந்து நில்" என்ற இறைவாக்கைக் குறிக்கும். இது மனிதனைத் தன் ஆற்றலை உணர்ந்து, அறிவாலும் உழைப்பாலும் உயர்ந்து, உலகை நல்வழியில் இயக்கத் தூண்டும் எழுச்சிமிக்க சொற்றொடராகும்.

முக்கியத் தகவல்கள்:

- **தூரன் கவிதைகள்:** பெரியசாமித் தூரன் அவர்களின் வசன கவிதைத் தொகுப்புகளில் 'மானிடா எழுக' என்ற கவிதை நூல் தனிச் சிறப்பு வாய்ந்தது.
- **பொருள்:** அறியாமை, அடிமைத்தனம் மற்றும் சோம்பலில் இருந்து மனிதன் விடுபட்டு, அறிவுத் தெளிவுடனும், தன்னம்பிக்கையுடனும் எழுந்து செயல்பட வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது.
- **விவிலியக் கருத்து:** எசேக்கியேல் தீர்க்கதரிசி நூலில், இறைவன் மானிடனைப் பொறுப்புடன் எழுந்து நிற்கப் பணிக்கும் வார்த்தையாக இது உள்ளது.

தன்னம்பிக்கை மற்றும் சமூக மேம்பாட்டிற்கான ஒரு எழுச்சிப் பதிகமாக இது கருதப்படுகிறது.

'நாட்டிய ராணி' (1949) என்பது பி.என்.ராவ் இயக்கத்தில் வெளிவந்த ஒரு தமிழ் நடனத் திரைப்படம். வசுந்தரா தேவி (வைஜயந்தி மாலாவின் தாய்) நாயகியாக நடித்த இந்தப் படம், பாபநாசம் சிவன் இசையில், கதையோடு நடனத்தை இணைத்து, அக்காலத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்ற திரைப்படமாகும்.

நாட்டிய ராணி திரைப்படம் பற்றிய முக்கிய விவரங்கள்:

- **வெளியான ஆண்டு:** 1949, ஆகஸ்ட் 19.
- **இயக்குநர்:** பி. என். ராவ்.
- **நடிகர்கள்:** வசுந்தரா தேவி (நாயகியாக), பி. எஸ். ராஜா ஐயங்கார், டி. எஸ். பாலையா.
- **இசை:** பாபநாசம் சிவன்.
- **சிறப்பம்சம்:** இது முழுமையான நடனத்தை மையமாகக் கொண்ட திரைப்படமாக, அந்த காலக்கட்டத்தில் தனித்துவமாக அமைந்தது.

நூல்/pdf விவரங்கள்:

பெரியசாமித் தூரன் எழுதிய 'நாட்டிய ராணி' என்ற பெயரிலான கதைகளும், இணைய நூலகங்களில் (Tamil Digital Library) கிடைக்கின்றன, இவை பெரும்பாலும் குழந்தைகளுக்கான கதைகளை உள்ளடக்கியதாக அறியப்படுகிறது.

காளிங்கராயன் கொடை

https://www.sirukathaigal.com/%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%95%E0%AF%8A%E0%AE%9F%E0%AF%88/

“”””வாங்க தம்பீ, பட்டணத்துக்குப் போனதிலிருந்து கண்ணிலே கூடக் காண முடியறதில்லே. வாங்க, இப்படிப் பாயிலே உட்காருங்கோ”” என்று அந்தப் பெரியவர் அன்போடு என்னை வரவேற்றார். அந்தி வேளை, பகல் ஒளி மறைந்து இருள் கூடிக் கொண்டிருந்தது. பெரியவர் அப்பொழுதுதான்

பண்ணையிலிருந்து வீட்டிற்குத் திரும்பியிருக்கிறார். அவருடைய மருமகள் ஒரு செம்பிலே தண்ணீரும், ஒரு தட்டத்திலே வெற்றிலைப் பாக்கும் கொண்டு வந்து வைத்துவிட்டு, உள் வீட்டுக் கதவருகிலே போய்ச் சற்று மறைவாக நின்று, """"வீட்டிலே எல்லாரும் சுகமா இருக்காங்களாக?"" என்று அடங்கிய குரலில் கேட்டாள். """"எல்லோரும் சௌக்கியந்தானுங்க"" என்று நான் பதில் சொல்லிக்கொண்டே பாயில் அமர்ந்தேன். """"நம்ம சின்னப்பையன் முத்து வீட்டுக்காரி உங்க வீட்டைப் பற்றி நினைக்காத நாளே கிடையாது தம்பீ. நீங்க இந்த ஊரிலே இருந்தபோது அவர்கள் ரண்டு பேரும் அப்படி உயிருக்குயிரா இருந்தாங்கோ. ஏன் தம்பி, நீங்கள் தனியாத்தான் வந்தீங்களா?"" என்று பெரியவர் தமது மருமகள் கேட்ட கேள்விக்கு வியாக்கியானமாகப் பேசினார். என் மனைவியைப் பற்றித்தான் அவர்கள் அப்படி விசாரிக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் சட்டென்று விளங்காமலிருக்கலாம். ஆனால் எங்கள் நாட்டு மக்களுக்கு அது உடனே விளங்கும்.

""""தனியாத்தானுங்க வந்தேன். அவளையும் கூட்டி வர வேணும்னா எங்கே முடியுது?"" என்றேன் நான். """"ஆமா, உங்களுக்கு எத்தனை சோலியோ?... இருந்தாலும் எல்லோருமா வந்து நாலு நாளைக்கி இப்படி இருந்துட்டுப் போனா மனசுக்கு சந்தோஷமா இருக்கும். கட்டுத் தறியிலேயே கட்டிப் போட்டாப்புடி ஒரே பக்கத்திலே இருந்தா அவுங்களுக்கும் சலிச்சுப்போகும்"" என்று பெரியவர் தம் அனுபவத்திலே உறுதிப்பட்ட உண்மையை எடுத்துக் கூறினார்.

கொங்கு நாட்டிலே எங்கள் ஊரிலே இப்படி அன்போடு பேசி வரவேற்பது சாதாரணமாக பழக்கம். எனக்கு இந்தப் பேச்சைக் கேட்பதிலே தனி மகிழ்ச்சியுண்டு. இந்தத் தடைவ ஊருக்குச் சென்ற போதும் இந்த அன்புப் பேச்சைக் கேட்டு என் உள்ளம் பூரித்தது. கொங்கு நாட்டு வேளாளர்களின் பேச்சு ஓர் அலாதியான சுவையோடு இனிக்கும். அவர்கள் என் உறவினர்கள்

என்பதால் மட்டும் அப்படி இனிக்கிறதென்று யாரும் நினைக்க வேண்டாம். அந்தக் கொச்சையான பேச்சிலே அத்தனை கனிவும் கபடமற்ற அன்பும் குழைந்து கிடப்பதை யாரும் எளிதில் உணர்ந்து கொள்ளலாம். நான் செம்பிலேயிருந்த தண்ணீரைக் கொஞ்சம் பருகி விட்டு வெற்றிலையை மடிக்க ஆரம்பித்தேன். எனக்கு வெற்றிலை போடும் பழக்கம் கிடையாது. ஆனால் எங்கள் ஊர்ப் பக்கத்திற்குச் சென்றால் வெற்றிலை போடாமல் இருக்க முடியாது. அங்கு வாழும் மக்களுடைய அன்பே மனமார ஏற்றுக் கொண்டதற்கு வெற்றிலை போடுவது ஓர் அடையாளம். ஒரு வீட்டிலே விருந்துண்ணாமல் கூட வந்து விடலாம். ஆனால் வெற்றிலையை ஏற்காமல் வந்துவிட்டால் அந்த வீட்டார் மனம் வருந்துவார்கள். எங்கள் மேலே மனசிலே என்ன வருத்தமோ?"" என்று அவர்கள் கவலைப்படத் தொடங்கி விடுவார்கள்.

""""பட்டணத்திலே இந்த வருசம் மழைத்துளி எல்லாம் எப்படி?"" என்று மருமகள் இந்தச் சமயத்திலே கேட்டாள். """"பட்டணத்திலே மழையைப் பற்றி அவுங்களுக்கு என்ன கவலை? அங்கேதான் பணமா விளையுது. நம்மைப் போலே நிலத்தை நம்பியா அவுங்க பிழைக்கிறாங்கோ?"" என்று பெரியவர் இடைமறித்துப் பேசினார். """"இல்லீங்க. பட்டணத்திலேயும் மழை இல்லாது போனால் கஷ்டந்தானுங்க. குடிக்கக் கூடக் தண்ணீர் கிடைக்காது"" என்று நான் சொன்னேன். """"அது வாஸ்தவம் தம்பீ, மழை இல்லாமல் போனால் எல்லோருக்கும் கஷ்டந்தான். இருந்தாலும் எங்க கஷ்டம் உங்களுக்கு வராது. நாங்கள் மழையை நம்பித்தான் பிழைக்க வேணும்"" என்று பெரியவர் விவசாயிகளுக்கு மழை எவ்வளவு முக்கியம் என்பதைக் குறிப்பாகக் காட்டினார்.

அந்த சமயத்திலே ஒரு தள்ளாத கிழவர் கைத்தடியை ஊன்றிக் கொண்டு தடுமாறித் தடுமாறி அங்கே வந்தார். அவரைப் பார்த்தவர்கள் அவர் குறைந்தது இரண்டு நாட்களாவது பட்டினியாக இருந்திருக்க வேண்டும்

என்று உடனே கண்டு கொள்வார்கள். அவரை யாரென்று வீட்டுக்காரப் பெரியவருக்குத் தெரியாது. இருந்தாலும் வழக்கப்படி அவரை அன்போடு வரவேற்றுப் பாயில் உட்காரும்படி சொன்னார். """"வெற்றிலை போடுங்கோ, எங்கேயோ ரொம்பத் தூரம் போய் வந்திருக்கிறாப்பிலே தெரியுது"" என்று பெரியவர் அவரை இன்னாரென்று தெரிந்து கொள்ளுவதற்காகக் குறிப்பாகக் கேட்டார்.

""""ஆமாங்கோ, திருச்செங்கோட்டுக்குப் போய் மலையேறி அர்த்தனாரீசுவரரைத் தெரிசிக்க வேணும்ணு ரொம்ப நாளாகத் தவணை. அதுக்கு இப்பத்தான் வேளை வந்துகூடிச்சு"" என்று கிழவர் தமது நீண்ட பயணத்தைப் பற்றி விளக்கினார். """"கால் நடையாகவே போய்விட்டு வந்துட்டாப்பலே இருக்குது?"" என்று பெரியவர் மீண்டும் கேட்டார்.

""""ஆமாங்க, அப்படித்தான் வேண்டுதலை செய்துக்கிட்டேன். வண்டி பூட்டவும் வசதி பத்தாதுங்க. எங்க ஊரிலிருந்து இருபத்தஞ்சு மைல் தானுங்கோ திருச்செங்கோடு போக ஒரு நாள் வர ஒரு நாள் அங்கே சுவாமி தரிசனத்துக்கு ஒரு நாள். அவ்வளவு தானுங்கோ, இந்த வயசிலும் எனக்கு அது கஷ்டமில்லீங்கோ"" என்றார் கிழவர். """"இங்கிருந்து திருச்செங்கோட்டுக்கு நேராக காவிரியைத் தாண்டிப் போனாப் பத்து மைல் ஆகுது. அப்போ நம்ம ஊரு இங்கிருந்து இன்னும் மேக்கே இருக்குதுங்களா?"" என்று பெரியவர் விநயமாகக் கேட்டார். """"ஆமாங்கோ, இங்கிருந்து இன்னும் பதினைஞ்சு மைல் போக வேணும். திருச்செங்கோட்டிலிருந்து நான் காலையிலே புறப்பட்ட நேரத்துக்கு இந்நேரம் ஊரே போய்ச் சேர்ந்திருக்க வேணும். இருபத்தஞ்சு மைல் ஒரே மூச்சிலே நடந்திடுவனுங்க... ஆனால் இன்னைக்கி அப்படி முடியல்லே.""

""""அதுக்கென்னங்க? அப்படி அவசரமாகப் போகாவிட்டால் என்ன முழுகிப் போவுது? நாங்களெல்லாம் மனுசரு இல்லையா? இருந்து

சாப்பிட்டு விட்டு இளைப்பாறி நாளைக்குப் போனாப் போகுது"" என்றார் பெரியவர். """"அதுக்கொன்னும் உங்க வீட்டிலே குறைவில்லீங்கோ. நீங்கதான் ஊர் பண்ணாடின்னு கேள்விப்பட்டு ராத்திரிக்கு இங்கே தங்கியிருந்து போகலான்னு வந்தேன். இருட்டிலே கண் சரியாத் தெரியாதுங்கோ"" என்றார் கிழவர். """"கண் தெரிஞ்சாலும் தெரியாது போனாலும் இருட்டிலே அப்படி எதுக்குப் போக வேணும்? இது உங்க வீடு மாதிரிதானுங்கோ. எழுந்திருங்கோ சாப்பிடலாம்"" என்று பெரியவர் அவரிடம் கூறிவிட்டு, """"தம்பீ, நிங்களும் இன்னிக்கு இங்கேதான் சாப்பிட வேணும்"" என்று என்னிடம் சொன்னார்.

நான் அவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு உடனே எழுந்தேன். பட்டினியாக வந்திருக்கும் கிழவருக்கு உடனே உணவு தரவேண்டும் என்பது எங்கள் இருவருடைய உட்கருத்தாகவும் இருந்தது. ஆனால் கிழவர் பாயை விட்டு எழுந்திருக்கவில்லை. """"நீங்கள் போய்ச் சாப்பிடுங்கோ. நான் இன்னைக்கு சாப்பிடறதில்லை. உடனே படுத்துக்க வேணும். அவ்வளவுதானுங்க"" என்று அவர் கூறினார். பண்ணாடி அவரை விடவில்லை. சாப்பிட்டே தீர வேண்டும் என்று கட்டாயப் படுத்தினார். வந்தவர் ஒரே மனமாக மறுத்துக் கொண்டே இருக்கவே பண்ணாடிக்கு ஒரு சந்தேகம் வந்தது. """"கோயிலுக்குப் போய் வந்ததனால் விரதம் ஒண்ணும் இல்லையே?"" என்று அவர் கேட்டார். கோயிலுக்குப் போய்த் திரும்புகிறவர்கள் வீடு சேரும் வரை உண்ணாவிரதம் இருப்பதுண்டு.

""""கோயிலுக்குப் போனதிலே விரதம் இல்லீங்கோ. ஆனால் வேறே ஒரு விரதம் இருக்குதுங்கோ. அதை அப்புறம் நீங்கள் சாப்பிட்டுவிட்டு வந்த பிறகு வேணும்னா சொல்லறேன். இப்போ நீங்கள் போய்ச் சாப்பிடுங்கோ"" என்றார் கிழவர். """"எங்களுக்கு இப்போ அவசரம் இல்லீங்கோ. நாங்கள் வழக்கமாச் சாப்பிட இன்னும் நேரமாகும்"" என்றேன் நான். """"அது

தெரிஞ்சுது தம்பீ. எனக்காகத்தான் பண்ணாடியும் இத்தனை அவசரமாகச் சாப்பிட எழுந்திருக்கிறாங்கோன்னு நான் கண்டுக்கிட்டேன்... ஆனால் நான் சாப்பிடறது இல்லை"" என்றார் கிழவர். """"ஏன் சாப்பிடறது இல்லைன்னு தெரியாமல் நாங்கள் போகப் போறதில்லை. வீட்டுக்கு வந்த விருந்தாளியை விட்டுப் போட்டு சாப்பிடற வழக்கம் எங்க வம்சத்திலேயே இல்லீங்கோ"" என்று உட்கார்ந்தார் பண்ணாடி.

பண்ணாடி அப்படி ஒரே தீர்மானமாக உட்கார்ந்த பிறகும், தாம் சாப்பிட மறுப்பதற்கு விளக்கம் சொல்லாமலிருப்பது சரியல்லவென்று கிழவருக்குப் பட்டது. """"விருந்தாளியை விட்டுச் சாப்பிடறது உங்கள் வம்சத்திலே இல்லீங்கோ கொடுத்த தருமத்தை மறுபடியும் கையிலே தொடறது எங்க வம்சத்திலேயும் இல்லீங்கோ – ஏழையாப் போய்ட்டாலும் காளிங்கராயன் வம்சமுங்கோ நாங்கோ"" என்றார் கிழவர்.

""""அப்படிங்களா? ரொம்ப சந்தோசமுங்கோ. அப்போ உங்களை நான் இனிமேலும் சாப்பிடக் கூப்பிட மாட்டேனுங்கோ விஷயம் தெரிஞ்சு போச்சு – ஆனால் வீட்டுக்கு வந்தவங்கள் பட்டினியாக இருக்கிறபோது நானும் சாப்பிடப் போறதில்லை... தம்பீ, நீங்க மாத்திரம் போய் சாப்பிட்டு வாங்கோ"" என்றார் பெரியவர். """"எனக்கு மாத்திரம் எதுக்குங்கோ? என்றேன் நான். """"தம்பீ, இப்போ நீங்க இந்த ஊருக்காரர் அல்ல. நீங்கள் விருந்தாளி தான். நீங்கள் சாப்பிட்டாக் குத்தமில்லை"" என்றார் பண்ணாடி.

இதே சமயத்தில் அவருடைய மருமகளும் வந்து என்னைச் சாப்பிட வற்புறுத்தத் தொடங்கவே நான் சமையற் பகுதிக்குச் சென்றேன். சாப்பிட்டுக் கொண்டே, """"அவர் ஏன் சாப்பிட மாட்டேனென்று பிடிவாதமாக இருக்கிறார்?"" என்று கேட்டேன் மருமகள் சொன்ன பதில் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. """"காளிங்கராயன் வம்சத்தார் நம்ம பக்கத்திலே தண்ணீர் கூடத் தொடமாட்டார்கள்"" என்றாள் அவள். """"ஏன் அவர்களும்

நம்மைப்போல வேளாளக் கவுண்டர்கள்தானே? நம்மைவிட உயர்ந்தவர்களா?"" """"அப்படி ஒன்னும் இல்லை. ஆனால் காளிங்கராயக்கவுண்டர்தான் அந்தக் காலத்திலே சுமார் நூறு நூற்றப்து வருசத்துக்கு முன்னாலே நம்ம ஊருக்கு வாய்க்கால் வெட்டிவச்சார். அந்த வாய்க்கலிலிருந்து தண்ணீர் பாய்ஞ்சுதான் நம்ம ஊட்ரலே நெல் விளையுது""

""""அது எனக்கும் தெரியும். அதனால்தான் இந்த வாய்க்காலுக்குக் காளிங்கராயன் வாய்க்கால் என்று பெயர் வந்திருக்கிறது. பவானி ஆறு காவிரியில் சங்கமமாகிற இடத்திலிருந்து வாய்க்கால் கொண்டு வந்திருக்கிறார்கள்"" என்று நான் மேலும் விளக்கம் கூறினேன். """"ஆமாம். இந்த வாய்க்காலை வெட்டி வச்சதும் அந்த வம்சத்தார் எல்லோரும் மேற்கே குடி போய்விட்டார்களாம். தருமத்திற்காக அவர்கள் வெட்டிய வாய்க்காலிலுருந்து தண்ணீர் பாய்ஞ்சு விளைகிற அரசியை அவுங்க சாப்பிட மாட்டாங்களாம். அப்படி சாப்பிட்டால் தருமம் கெட்டுப்போகுமாம். அந்த வம்சத்திலே இப்போ ஏழையா இருக்கறவங்க கூட நம்ம பக்கத்திலே தண்ணீர்கூடக் குடிக்க மாட்டாங்கோ""

""""அப்படியா?"" என்று நான் ஆச்சரியத்தில் முழுகி விட்டேன். எனக்கு அதற்குமேலே சாப்பிடக்கூட முடியவில்லை. அவசரம் அவசரமாக ஒருவாறு உணவை முடித்துக்கொண்டு அந்தக் கிழவர் தூங்குவதற்கு முன் அவரை நன்றாகப் பார்க்க வேண்டுமென்று வந்தேன். """"ஏனுங்கோ, இந்தப் பக்கம் வர்றபோது உங்கள் வீட்டிலேயே செய்த கட்டு சோறாவது கொண்டு வரலாமே? அதைக் கூடக் காணமே?"" என்று பண்ணாடி கிழவரை அந்தச் சமயத்தில் கேட்டுக் கொண்டிருந்தார். அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டுமென்று நானும் எண்ணிக் கொண்டிருந்தேன். """"கொண்டுகிட்டுத்தான் வந்தனுங்கோ. கோயிலுக்குப் போற போது காளிங்கராயன் வாய்க்கலைத் தாண்டித் தானுங்கோ போக வேணும். அப்படிப் போகிறபோது அந்த வாய்க்கால் கரையிலே ரண்டு மாடு மேய்க்கிற

பசங்கள் கஞ்சிக்குச் செத்து உட்கார்ந்திருந்தாங்கோ, கண்ணெல்லாம் குழி பாஞ்சு கிடந்தது.""

""""சரிசரி கட்டுச்சோத்து மூட்டையை அவுங்களுக்குக் கொடுத்திட்டீங்களா?"" """"ஆமாங்கோ, வாய்க்கால் வெட்டி வச்சவன் வச்சான். ரண்டு வேளைக்குச் சோறு கூடப் போடப்படாதுங்களா? ரண்டு நாளைக்குப் பட்டினியாக் கிடந்தா நான் என்ன செத்தா போவனுங்க?"" கிழவர் பேச்சைக் கேட்டு எனக்கு அவரிடத்திலே மிகுந்த மரியாதை ஏற்பட்டது. காளிங்கராயனுடைய தாராள மனம் இன்னும் இருக்கிறதென்று நான் பூரிப்படைந்தேன். மறுநாள் காலையிலே அந்தக் கிழவரின் முகத்தைப் பகல் வெளிச்சத்திலே நன்றாகப் பார்க்கவேண்டுமென்று எனக்கு ஆசை. ஆனால் அந்த ஆசை நிறைவேறவில்லை. கிழக்கு வெளுக்கு முன்னமேயே கரிக்குருவி கூப்பிடுறபோதே எழுந்து அந்த கிழவர் கால்நடையாகத் தமது ஊருக்குப் போய்விட்டார்.

இரவீந்திரநாத் தாகூரின் படைப்புகளைக் குழந்தைகளுக்காகத் தழுவி எழுதப்பட்ட அல்லது மொழிபெயர்க்கப்பட்ட நூலே **"இரவீந்திரர் குழந்தை இலக்கியம்"** ஆகும். இது சாகித்திய அகாதெமியால் வெளியிடப்பட்ட, லீலா மஜும்தார் மற்றும் ஷிதிஸ்ராய் ஆகியோரால் தொகுக்கப்பட்டு, த.நா. சேனாபதி மற்றும் ம.ப. பெரியசாமித்தூரன் ஆகியோரால் தமிழில் கொண்டுவரப்பட்ட ஒரு சிறந்த சிறுவர் இலக்கிய நூல்.

முக்கிய தகவல்கள்:

- **பொருள்:** தாகூரின் கவிதைகள், கதைகள், நாடகங்கள் சிறுவர் உணர்வுக்கு ஏற்ப மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- **சிறப்பு:** இயற்கையை ரசித்தல், கற்பனைத்திறன், மற்றும் உயர்ந்த பண்புகளைக் குழந்தைகளிடம் வளர்க்கும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன.
- **பங்களிப்பு:** **ம.ப. பெரியசாமித்தூரன் இக்கலைக்களஞ்சியப் பணிகளில் முக்கிய பங்காற்றியுள்ளார்.**

இந்த நூல் தமிழ் சிறுவர் இலக்கியத்தில் தாகூரின் படைப்புகளை அறிமுகப்படுத்தும் ஒரு முக்கிய முயற்சியாகும்.

காதலும் கடமையும் என்பது தனிப்பட்ட ஆசைக்கும் (காதல்), சமூக/குடும்ப பொறுப்பிற்கும் (கடமை) இடையிலான போராட்டத்தை விவரிக்கும் கருப்பொருளாகும். இலக்கியங்களிலும், கலைப்படைப்புகளிலும், இது பெரும்பாலும் காதலுக்காகக் கடமையை விடுவதா அல்லது கடமைக்காகக் காதலைத் தியாகம் செய்வதா என்ற போராட்டமாகவே சித்தரிக்கப்படுகிறது.

முக்கிய அம்சங்கள்:

- **பெ. தூரனின் படைப்பு:** 1967-ல் பாரி நிலையம் வெளியிட்ட "காதலும் கடமையும்" என்ற நூல், காதலுக்கும் கடமைக்கும் இடையே சிக்கித்தவிக்கும் சூழலை விவரிக்கிறது.
- **கபிலரின் குறிஞ்சிப்பாட்டு:** தமிழ் இலக்கியத்தில் கபிலரின் குறிஞ்சிப்பாட்டு, காதலும் கடமையும் இணையும் ஒரு உளவியல் ரீதியான சிறுகதையாகப் பார்க்கப்படுகிறது.
- **பரிணாமம்:** இது பெரும்பாலும் காதலைத் தியாகம் செய்து, குடும்பம் அல்லது சமூகத்திற்கான கடமையைச் சிறப்பாகச் செய்வதைக் கொண்டாடும் தன்மையைக் கொண்டது.


காதல் மனதின் விருப்பத்தையும், கடமை சமூகத்தின் எதிர்பார்ப்பையும் குறிக்கின்றன. இவ்விரண்டிற்கும் இடையிலான சமநிலையே வாழ்க்கையின் சவாலாக கருதப்படுகிறது.

பெ. தூரன் எழுதிய 'பெற்றோர் கொடுத்த பெருங்கொடை' (1954) என்பது, பாரம்பரியம் மற்றும் பரம்பரை பண்புகள் (Heredity) குறித்து குழந்தைகளுக்கான உளவியல் மற்றும் அறிவியல் பார்வையில் எழுதப்பட்ட ஒரு நூலாகும். இந்நூல் பெற்றோர் குழந்தைக்கு அளிக்கும் மரபணு சார்ந்த பண்புகள், உடல் மற்றும் மன வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றி விளக்குகிறது.

நூலின் முக்கிய கருத்துக்கள்:

- **பாரம்பரியம்:** தாய் தந்தையரைப் போலக் குழந்தை பிறப்பது, அவர்களின் பண்புகள் குழந்தைக்குக் கிடைப்பது ஒரு விந்தை என்று இந்நூல் குறிப்பிடுகிறது.
- **வளர்ச்சி:** "பெற்றோர் கொடுத்த பெருங்கொடை" என்ற அத்தியாயத்தில், குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும் மற்றும் பாரம்பரியம் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது.
- **பொருளடக்கம்:** இது குழந்தைகளுக்கான அறிவு சார்ந்து, "வித்வான் மகன் வித்வானா?" என்ற கேள்வியுடன் மரபணுவின் முக்கியத்துவத்தை ஆராய்கிறது.

பெரியசாமித்தூரன் எழுதிய இந்த நூல் Tamil Authors மூலம், வம்சாவளி பண்புகள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு எப்படி கடத்தப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.



ஆதி அத்தி, கவிஞர் பெரியசாமித்தூரன் அவர்களால் எழுதப்பட்ட ஒரு வரலாற்று நாடக நூல் ஆகும். முதன்முதலில் 1956-ல் வெளியிடப்பட்ட இந்த நூல், காதலில் தியாகம் மற்றும் அன்பின் வலிமையை மையமாகக் கொண்டு, தமிழ் இலக்கிய உலகில் முக்கியப் படைப்பாகக் கருதப்படுகிறது.

முக்கிய அம்சங்கள்:

- **ஆசிரியர்:** பெ. தூரன்
- **வகை:** வரலாற்று நாடகம்
- **வெளியீடு:** 1956
- **கருப்பொருள்:** பிரிவின் துயரம், தியாகம், மற்றும் கலை

இந்த நாடகம் சோழன் கரிகாலனின் மகள் [**ஆதிமந்தி**] மற்றும் காவிரிப்பூம்பட்டினத்தைச் சேர்ந்த **ஆட்டனத்தி** ஆகியோரின் கதை என கருதப்படுகிறது (ஆதிமந்தி, சோழன் கரிகாலனின் மகள்).

இது பாரி நிலையம் மற்றும் சுதந்திர நிலையம் மூலம் வெளியிடப்பட்டிருந்தது. இந்த நூல் Tamil Digital Library மற்றும் Internet Archive ஆகிய இணையதளங்களில் வாசிக்க கிடைக்கிறது.




ஜாக் லண்டன் எழுதிய புகழ்பெற்ற ஆங்கில நாவலான 'The Call of the Wild' என்பதன் தமிழாக்கம் **'கானகத்தின் குரல்'** ஆகும். 1958-ல் பெ.தூரன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட இந்நூல், 'பக்' (Buck) என்ற நாய் செல்லப் பிராணியாக இருந்து, அலாஸ்காவின் கடுமையான பனிப்பிரதேசத்தில், கானகத்தின் சவால்களை எதிர்கொண்டு ஓநாயாக மாறும் கதையை விவரிக்கிறது.

முக்கிய அம்சங்கள்:

- **மூல ஆசிரியர்:** ஜாக் லண்டன்.

- **தமிழாக்கம்:** பெ.தூரன்.
- **பொருள்:** மனிதர்களாலும் சூழலாலும் வஞ்சிக்கப்படும் ஒரு நாய், தன் இனத்தின் இயற்கையான காட்டுக்குணத்தை உணர்ந்து, தலைமைப் பண்புடன் தன் இருப்பைத் தக்கவைக்கும் போராட்டத்தை விவரிக்கிறது
- **களம்:** அலாஸ்காவின் தங்க வேட்டைக்காலம் (Gold Rush) மற்றும் பனிச்சறுக்கு வண்டி நாய்களின் வாழ்க்கை.

இது ஒரு நாய் கதையாக இருந்தாலும், மனிதனின் சுயநலம், துரோகம் மற்றும் வாழ்வுக்கான போராட்டத்தை உணர்த்தும் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாகக் கருதப்படுகிறது.



கொல்லிமலைக் குள்ளன் என்பது **பெரியசாமி தூரன்** எழுதிய பிரபலமான சிறுவர் நாவல். இந்த நூல் சுவாரஸ்யமான சாகசக் கதைகளையும், குள்ளர்கள் பற்றிய புனைவுகளையும், கொல்லிமலையின் பின்னணியில் குழந்தைகளைக் கவரும் வகையில் விவரிக்கிறது. இது பாலன்ப்பா பிரதர்ஸ் மூலம் வெளியிடப்பட்ட ஒரு கிளாசிக் சிறுவர் இலக்கியம் ஆகும்.

கொல்லிமலைக் குள்ளன் நாவலின் முக்கிய அம்சங்கள்:

- **ஆசிரியர்:** பெ. தூரன் (பெரியசாமி தூரன்).
- **வகை:** சிறார் நாவல் (Adventure/Fiction).
- **கருப்பொருள்:** கொல்லிமலையில் வாழும் குள்ள மனிதர்கள் மற்றும் அவர்களின் சாகசங்களைச் சுற்றியே கதை நகர்கிறது.
- **பின்னணி:** கொல்லிமலையின் குகைகள், இயற்கையான அமைப்புகள் மற்றும் மர்மமான சூழல் கதையில் முக்கிய பங்கு வகிக்கின்றன.
- **கிடைக்கும் தன்மை:** இது Kindle மற்றும் மின்-நூலாக Amazon.in மற்றும் Goodreads தளங்களில் கிடைக்கிறது.

இந்த நாவல் தமிழ் சிறுவர் இலக்கியத்தில் ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது.





மழலை அமுதம் என்பது குழந்தைகளுக்கான கவிஞர் [பெரியசாமித்தூரன்](#) எழுதிய பிரபலமான குழந்தைப் பாடல்களின் தொகுப்பு ஆகும், இது 1981-ல் வெளியிடப்பட்டது. இது குழந்தைகளுக்கான எளிய மற்றும் அழகான பாடல்களைக் கொண்டுள்ளது.

சிறப்பம்சங்கள்:

- **ஆசிரியர்:** கவிஞர் பெரியசாமித்தூரன்.
- **பொருள்:** குழந்தைகளுக்கான பாடல்கள் மற்றும் கவிதைகள்.
- **பாடல்கள்:** இதில் நிலாப்பாட்டி, பறக்கும் மனிதன், ஆனையும் பூனையும் போன்ற பல சிறுவர் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.
- **வகை:** இது குழந்தைகளுக்கான பாடல் நூல். இந்த நூல் தமிழ் இலக்கியத்தில் குழந்தைகளுக்கான ஒரு முக்கிய படைப்பாகக் கருதப்படுகிறது.

காணொளிகள்

01] Popular Compositions of Periasami Thooran | Carnatic Classicals | Bombay Jayashri | Sudha Ragunathan
https://www.youtube.com/watch?v=di3rQelFN_k [35:51]

02] M.N. Karassery | தமிழ்விக்கி - பெரியசாமி தூரன் விருது விழா **2024 |** எம்.என்.காரசேரி
https://www.youtube.com/watch?v=y8fN2R5v9Ag [21:39]

03] கலைக்களஞ்சியம் கண்ட கவிஞர் பெ.தூரன் | தமிழ் வளர்த்த சான்றோர்கள்
https://www.youtube.com/watch?v=eTLS-EsDif4 [2:08:00]

04] Samarpanam Album by Periyasami Thooran | Yogi Ramsuratkumar | சமர்பனம் | பெரியசாமி தூரன்
https://www.youtube.com/watch?v=fjBopnx81Hk [1:25:46]

05] நாதஸ்வர தவில் இசை | தமிழ்விக்கி - பெரியசாமி தூரன் விருது விழா 2024
https://www.youtube.com/watch?v=cJf4wCbMr7Y [2:05:02]

06] Jeyamohan speech | தமிழ் விக்கி - பெரியசாமி தூரன் விருது விழா 2023
https://www.youtube.com/watch?v=Cj3k2T4aFsY [32:53]

(😊)(😊) @@@@@ (😊)(😊)

காலக்கோடு

எம்.பி. பெரியசாமி தூரன் (1908–1987) ஒரு புகழ்பெற்ற தமிழ்க் கவிஞர், தேசபக்தர், ஆசிரியர் மற்றும் கர்நாடக இசையின் முக்கிய இசையமைப்பாளர் ஆவார். இவர் முருகப்பெருமான் மீது கொண்ட பக்திக்காக அறியப்பட்டவர்.

பெரியசாமி தூரனின் காலவரிசை

- **1908:** தமிழ்நாடு, தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் அருகே உள்ள மஞ்சக்கொல்லை கிராமத்தில் பிறந்தார்.
- **கல்வி:** மெட்ராஸ் கிறிஸ்டியன் கல்லூரியில் பட்டம் பெற்றார்.
- **பணி வாழ்க்கை:** ஆரம்பத்தில் ஆசிரியராகப் பணியாற்றி, பின்னர் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார்.
- **இசை மரபு:** தமிழில் 600 க்கும் மேற்பட்ட கிருதிகள் (பாடல்கள்), பெரும்பாலும் முத்திரை (கையொப்பம்) "தூரன்" கீழ். பிரபலமான பாடல்களில் *முருகா முருகா எண்றல்* மற்றும் *பால்வடியும் முகம்*ஆகியவை அடங்கும் .
- **இலக்கியப் பணி:** தமிழ் கலைக்களஞ்சியத் திட்டத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராகப்*பணியாற்றினார்.*
- **1987:** காலமானார்.

முக்கிய பங்களிப்புகள் மற்றும் அங்கீகாரங்கள்

- **நவராத்திரி இசையமைப்பாளர்:** ஒரு புகழ்பெற்ற நவீன தமிழ் இசையமைப்பாளராக அங்கீகரிக்கப்பட்டவர்.
- **பாணி:** பாரம்பரிய கர்நாடக ராகங்களில் அமைந்த, பெரும்பாலும் பக்தியை மையமாகக் கொண்ட எளிய, உள்ளத்தை உருக்கும் தமிழ்ப் பாடல்களுக்காக அறியப்படுகிறது.
- **கருப்பொருள்கள்:** அவருடைய படைப்புகள் பல்வேறு கருப்பொருள்களைக் கொண்டுள்ளன, பெரும்பாலும் முருகப்பெருமானையும் மற்ற தெய்வங்களையும் போற்றுகின்றன.

கர்நாடக இசை மரபில் தமிழ் இசைக்கோர்ப்புகளின் வளர்ச்சியில் அவர் ஒரு முக்கிய நபராகக் கருதப்படுகிறார்.